






இயேசுநாதர்
வாழ்க்கை வரலாறு

புனித போப்பாண்டவர்,
ஆறாம் சின்னப்பரின்,
நல்லாசியுடன்



சென்னை - மயிலாப்பூர்,
ஆர்ச்பிஷப், பேரருள்
பெருந்தகை
ஆர். அருளப்பா
அவர்களின் முன்னுரையுடன்

The Life of

JESUS CHRIST

By

A. L. NATARAJAN

(in Tamil)

—

With the blessings His Holiness
THE POPE PAUL-The VIth

—

with a foreward by HIS GRACE
R. ARULAPPA.
Arch-Bishop of Mylapore.

Published by

PAARI PUTHAKA PANNAI
576, PYCROFTS ROAD
TRIPLICANE MADRAS-5

இயேசுநாதர்

வாழ்க்கை வரலாறு

எழுதியவர் :

அ. லெ. நடராஜன்

புனித போப்பாண்டவர்,
ஆரூர் சின்னப்பரின்
நல்லாசியுடன்

—

சென்னை - மயிலாப்பூர்
ஆர்ச்பிஷப், பேரருள் பெருந்தகை
ஆர். அருளப்பா
அவர்களின் முன்னுரையுடன்

—

பாரி புத்தகப்பண்ணை
576, பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி : : சென்னை-5

Imprimatur + R. Arulappa, Arch-Bishop of
Madras & Mylapore
August 15th, '67

விலை ரூபா. 7-50

அச்சிட்டோர்:
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ்,
61/5, பாண்டி பஜார், தி நகர், சென்னை-17.

SEGRETERIA DI STATO

DI SUA SANTITA

DAL VATICANO July 24, 1967

N. 102049

Dear Mr. Natarajan,

I am graciously directed by the Sovereign Pontiff to acknowledge receipt of a copy of your book in Tamil entitled ''Life of Christ'', which you forwarded for His acceptance.

His Holiness is warmly appreciative of your thoughtful presentation, and thanks you sincerely for your gift, as well as for the kind sentiments of deferential homage which inspired it.

In return, the Pontiff willingly invokes upon you and your dear ones abundant divine graces and choicest heavenly favours.

With sentiments of esteem and regard, I remain

Sincerely yours,

சென்னை - மயிலாப்பூர்

அதிமேற்றிராணியார் அவர்களின்

முன்னுரை

''கிறிஸ்துவின் புனித வாழ்க்கை வரலாற்றை எங்களுக்கு நன்கு எடுத்து ஓதுங்கள். அவர் தந்த ஞான நன்மொழிகள் எங்கள் சமூகத்தின் இதயத்தை ஊடுருவிப் பாயட்டும். யேசுவைப்பற்றி ஒவ்வொரு சிற்றூரின் மூலை முடுக்குகளிலும் பிரச்சாரம் செய்யுங்கள்'' என்று சுவாமி விவேகாநந்தர் ''ஞானத் தீபம்'' என்னும் தமது நூலில் கூறியுள்ளார்.

இந்த விருப்பத்துக்கு இணங்க, நம் நாட்டு மொழிகளில் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் மிக மிகச் சொற்பமே உண்டு.

முதன் முறையாகக் கிறிஸ்தவர் அல்லாத ஒருவர், இவ் வரலாற்றை இனிய தமிழில் எழுத முன்வந்தது, பெரிதும் பாராட்டுதற்குரிய முயற்சி என்றே கருதுகிறேன். விவேகாநந்தர் விரும்பியதுபோல், கிறிஸ்து தந்த ஞான நன்மொழி நம் சமூகத்தின் இதயத்தை ஊடுருவிப் பாய்வதற்கு

இந் நூல் பெரிதும் துணைபுரியும் என்பது என் துணிபு.

சாதாரண மனித அறிவுக்கும் இயற்கை விதிகளுக்கும் மேற்பட்ட பல நிகழ்ச்சிகளை, நல்ல முறையில், உண்மைக்கு ஊறு செய்யாமல், எடுத்தோதுவது எளிதன்று.

எனினும் உயர்திரு ஏ. எல். நடராஜன் அவர்கள் அரும்பாடு பட்டுச் செய்த முயற்சி, நம் தமிழ் மக்கள் சமுதாயத்துக்குப் பெரிதும் பயன் அளிக்கும் என நம்ப இட முண்டு. இத்துணை அரிய முயற்சியைச் செய்யவும், அதில் வெற்றி பெறவும், அவரைத் தூண்டிவிட்ட ஆர்வத்தையும் உழைப்பையும் பாராட்டுவதோடு, இறைவனின் அருள் அவருக்கு நிரம்பக் கிடைக்க வேண்டும் என்றும் இறைஞ்சுகிறேன்.

இந் நூல் தமிழ் நாடெங்கும் கிறிஸ்துவர்களாலும், கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களாலும் விரும்பி வரவேற்கப்படும் என்பதில் ஐயமில்லை.

+ ஆர். அருளப்பா

சென்னை - மயிலை ஆர்ச்-பிஷப்

முகவுரை

மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்கு—அதாவது அமைதி யாகவும் ஆனந்தமாகவும் வாழ்வதற்கு—எது எது அவசியம் என்பதுபற்றி, வாதப் பிரதி வாதங்கள் அடிக்கடி நிகழ்ந்து வரும் காலம் இது.

ஒரு சாரார் ''மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்கு மதம் மிக மிக அவசியம். மதம் என ஒன்று இல்லாது போனால், காட்டுமிராண்டிகளைப்போல் விலங்கு வாழ்க்கை வாழ்ந்து, மனிதன் விலங்காக ஆகி இருப்பான். அப்படி ஆகவிடாமல், வழி துறைகளைக் காட்டி, மனிதனை மதம் மேன்மைப்படுத்தி இருக்கிறது.

''மதபோதனை என்பது தொடர்ந்து உலகில் நடைபெற்று இராவிடில், மனிதனின் மனநிலை பண்பட்டு இருக்காது. தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு அடக்கமாக வாழ மனிதன் தெரிந்துகொண்டிருக்க மாட்டான். மத போதனை யின் பயனாலேயே, மனித குலம், மாண்புடன் வாழ முயலு கிறது. இல்லாது போனால், மனிதனிடம் உறங்கிக் கிடக்கும் முரட்டுச் சுபாவம், மேலோங்கி, மனித சமுதாயத்தை, மிக மோசமான நிலைக்குக் கொண்டுபோ யிருக்கும். பலம் குறைந்த பெண்களும் குழந்தைகளும் மெலியவர்களும் பயமின்றி வீதிகளில் நடமாடும் நிலை ஏற்பட்டு இராது. கல்வியிலும் ஒழுக்கத்திலும் பண்பிலும் பழக்க வழக்கங் களிலும் மனிதன் உயர்வடைந்து இருக்க முடியாது. பிற

ருக்கு மனமுவந்து உதவவும், புன்முறுவலோடு தியாகம் செய்யவும், மனிதனுக்குக் கற்றுக்கொடுத்தது மதம்தான். ஆகவே, மனிதனின் நல்வாழ்வுக்கு மதம் மிக மிக அவசியம்'' என்று கூறுகிறார்கள்.

இது உண்மையல்ல என்று வேறு சிலர் மறுக்கிறார்கள். ''அரசாங்கம் என்னும் ஒரு நிறுவனம் சமூக அமைப்பில் இருந்து செயற்படுவதனாலேயே, மனிதன் கட்டுப்பட்டு யோக்கியமாய் நடக்கிறான். அரசாங்கத்தின் தண்டனைக்குப் பயந்து, மனிதர்களில் பெரும்பாலோர் கட்டுப்பட்டு நடக்கிறார்களே யல்லாமல், மதபோதனை காரணமாக மனிதர்கள் கட்டுப்பட்டு நடக்கவில்லை. ஆகையால், அரசாங்கம்தான் மனிதனின் நல்வாழ்வுக்கு இன்றியமையாத ஒரு சாதனம். அரசாட்சி நல்ல முறையில் நடைபெறுமாயின், எல்லாம் நன்றாக நடைபெறும்'' என்று கூறுகிறார்கள்.

இரு சாரார் கூறுவதிலும் பகுதி பகுதி உண்மை இருக்கிறது எனலாம்.

மதம் என்பது, மனித சமுதாய வளர்ச்சிக்கும், முன்னேற்றத்துக்கும் பெரிதும் உதவி இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மக்களை நல்லவர்களாய், அறிஞர்களாய், பரிவுள்ளவர்களாய், பண்புள்ளவர்களாய் செய்ததில் மதத்துக்கு முக்கியமான ஒரு பங்கு உண்டு.

கல்வித் துறை, மொழித் துறை, மருத்துவத் துறை பண்பாட்டுத் துறை ஆகியவற்றில், கிறிஸ்தவ சமயத்தினர் செய்திருக்கும் தொண்டு அளப்பரிது.

இலட்சிய புருஷராகவும், தெய்வமாகவும் தாங்கள் போற்றும் இயேசுநாதரின் போதனைகளை உலகில் பரப்பும் பொருட்டு, கிறிஸ்தவ சமயப் போதகர்கள், உலகின் மூலை

முடுக்குகளுக்கு எல்லாம் சென்றார்கள்; ஆர்வத்துடன் இன்றும் செல்கிறார்கள்.

அப்படிச் சென்றவர்கள், உலகிலுள்ள பல்வேறு நாட்டு மக்களுடன் பழகுவதற்கு, அந்தந்த நாட்டு மொழியைக் கற்றார்கள்; மொழிகளைக் கற்றார்கள். அதனால், தாங்கள் கற்ற மொழி வளர்ச்சிக்குத் தங்களை அறியாமலே, சில நற் காரியங்களைக் கிறிஸ்தவ சமயப் போதகர்கள் செய்திருக் கிறார்கள். இந்த உண்மையை, எந்த நாட்டினரும் எந்த மொழியினரும் மறுக்க முடியாது.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை, பெஸ்கி, வின்சிலோ, கால்டுவெல், போர்சிவல், ஹீராஸ், போப் ஆகிய கிறிஸ்தவ சமயப் போதகர்கள் செய்திருக்கும் பணியும் ஆராய்ச்சியும் மகத்தானவை எனலாம்.

இதேபோல, இந்திய நாட்டின் எல்லா மொழிகளுக்கும் அவற்றின் வளர்ச்சிக்கும் கிறிஸ்தவ சமயப் போதகர்கள் அரும்பெரும் தொண்டுகள் ஆற்றி இருக்கிறார்கள்.

போதகர்களுக்கு இத்தகைய தொண்டு மனப்பான் மையும் தியாக புத்தியும் எற்படத் தூண்டுகோலாய் இருந் தவர் யார்? இருப்பவர் யார்?

இயேசுநாதர்தான் என்று எந்தப் போதகரும் தயங் காமல் பதில் சொல்வார்.

இப்படி ஒரு தொண்டர் திருக்கூட்டத்தை உருவாக்கிய இயேசு பெருமானின் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்டு, சில நூல்களை நான் படித்தேன். தமிழி லும் படித்தேன்; ஆங்கிலத்திலும் படித்தேன்.

தமிழ் மொழியில் வந்திருக்கும் இயேசுநாதர்பற்றிய வரலாற்று நூல்களில் பெரும்பாலானவை, கிறிஸ்தவ சமயப் பரிபாஷைகளை மிகுதியாகக் கலந்து, எழுதப்பட்டிருக் கின்றன.

அவற்றைப் படிக்கும்போது, கிறிஸ்தவர் அல்லாதவர்களுக்கு, இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன.

இடர்ப்பாடுகள் ஏற்படாமலும், கிறிஸ்தவ சமய சம்பிரதாயங்களுக்கு முரண்படாமலும் எளிய தமிழில் இயேசு நாதரின் வாழ்க்கையை எழுதினால், மற்றவர்களுக்கு அது பயன்படக் கூடும் என்று கருதினேன்.

இதற்கு இணங்க, இயேசுநாதர் வாழ்க்கை வரலாறு என்னும் இந்த நூலை எளிய தமிழில் நான் எழுதி இருக்கிறேன் கிறிஸ்தவ சமய சம்பிரதாயங்களுக்கு முரண்படாமல் இந்த நூல் இருக்க வேண்டும் என்பதற்காக, சென்னை மயிலாப்பூர், ஆர்ச்-பிஷப் பேரருள் பெருந்தகை ஆர். அருளப்பா அவர்களிடம் சென்றேன். நான் எழுதி இருக்கும் கிறிஸ்துவின் வாழ்க்கையை, கிறிஸ்தவ சமய சம்பிரதாயங்களுக்கு முரண்படாது இருக்கும் வகையில் சரி பார்த்து, திருத்தித் தருமாறு வேண்டினேன்.

ஆர்ச்பிஷப் அவர்கள் விருப்புடன் இசைந்தார்கள். இயேசுநாதர் வாழ்க்கை வரலாறு என்னும் இந்த நூலை, முதலில் மறைத்திரு. அடைக்கலம் அவர்களிடம் கொடுத்து, முதலில் சரிபார்க்கச் செய்தார்கள்.

மறைத்திரு. அடைக்கலம் அவர்கள், இந்த நூலை முதலில் முழுதும் படிக்கச் சொல்லிக் கேட்டு, ஆர்ச்-பிஷப் அவர்களிடம் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்து, கைப்பிரதியையும் அவர்களிடம் கொடுத்துவிட்டார்கள்.

அதன் பின்னர் ஆர்ச்-பிஷப் அவர்கள் இந்த நூல் முழுவதையும் தாமே படித்துப் பார்த்து, திருத்தவேண்டிய பகுதிகளைத் தாமே திருத்தி, கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களும் படித்துப் பயன்பெறும் வகையில், மிகுந்த பொறுப்புடன் இந்த நூலைச் செப்பனிட்டுத் தந்தார்கள். வாசகர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தி, முன்னுரை ஒன்றும் எழுதித் தந்தார்கள். இயேசுநாதர் வாழ்க்கை வரலாறு

என்னும் இந்த நூலை ஆர்ச் பிஷப் அவர்கள் திருத்தித் தந்திராவிடில், திருப்தியுடன் இந்த நூலை வெளியிட என்னால் ஏற்பாடு செய்திருக்க முடியாது.

அதற்காக, பேரருள் பெருந்தகை ஆர்ச்பிஷப் **ஆர். அருளப்பா** அவர்களுக்கும் மறைத்திரு **அடைக்கலம்** அவர்களுக்கும் இதயபூர்வமான எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கத்தோலிக்கக் கிறிஸ்தவ சமயத்தினருக்குத் **தலைமைக்** குருவாக வாத்திகானில் வதியும் புனித போப்பாண்டவர் **ஆறாவது சின்னப்பர்** இந்த நூலை வரவேற்று நல்லாசி வழங்கி இருக்கிறார்கள் அவர்களுக்கு எனது வணக்கமும் நன்றியும் உரியன.

• * •

குற்றம் குறைகள் இந்த நூலில் தென்பட்டால், எடுத்துக் காட்டுமாறு வாசக அன்பர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நூலின் உள்ளே அறுபது படங்களுக்கு மேல் வந்திருக்கின்றன இந்தப் படங்களை, திரு எம். **வினசெனடு (சகுந்த்)** பக்தி சிரத்தையுடன் வரைந்து தந்தார்கள்

இந்த நூலை வெளியிடுவதில் பாரி புத்தகப் **பண்ணை** உரிமையாளர் திரு. **கண முத்தையா** அவர்கள் காட்டிய ஆர்வம் அதிகம். அவர்களுக்கும் ஓவியருக்கும் **எனது** நன்றி உரியது.

வணக்கம்,

அ. லெ. நடராஜன்

60, பாரதி நகர், சென்னை—17.

சென்னை
ஆகஸ்டு, 1967

பொருளடக்கம்

மறைவாயிருந்த காலம்

வெளிப்படுத்திக்கொண்ட காலம்

(முதலாம் ஆண்டு)

வெளிப்படுத்திக்கொண்ட காலம்
(இரண்டாம் ஆண்டு)

வெளிப்படுத்திக்கொண்ட காலம்
(மூன்றும் ஆண்டு)

வெளிப்படுத்திக்கொண்ட காலம்

(புனித வாரம்)

இயேசுநாதர்

வாழ்க்கை வரலாறு

மறைவாயிருந்த காலம்

முன் முப்பது ஆண்டுகள்

இயேசுநாதர்

(வாழ்க்கை வரலாறு)

தோற்றுவாய்

உலகில், மக்கள் பின்பற்றி ஒழுகும் முக்கிய சமயங்களில் கிறிஸ்தவ சமயமும் ஒன்று. இந்தச் சமயத்தைப் பின்பற்றும் மக்கள் உலகில் கோடிக் கணக்கில் இருக்கிறார்கள்.

ஐரோப்பா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய ஐந்து கண்டங்களில் வாழும் மக்களில் மிகப் பெரும்பாலோர் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தோராவர். ஆசியா கண்டத்திலும், கிறிஸ்தவ சமயத்தைப் பின்பற்றி வாழும் மக்கள் இல்லாத நாடே இல்லை என்று சொல்லிவிடலாம்.

கல்வித் துறை, கலைத் துறை, விஞ்ஞானத் துறை, தொழில் துறை, வாணிபத் துறை, ஆகிய துறைகள் அனைத்திலும், இன்று கிறிஸ்தவ நாடுகள் முன் அணியில் நிற்கின்றன, ஜப்பான் நாட்டைத் தவிர்த்து.

பொதுவாக, முக்கிய சமயங்கள் அனைத்தும்—கிறிஸ்தவ சமயம், இஸ்லாமிய சமயம், பௌத்த சமயம், இந்து சமயம், யூத சமயம், கன்பூசிய சமயம், ஆகிய சமயங்கள் அனைத்தும்—மக்கள் சமுதாயம் மேம்பாடு அடைவதற்கான மார்க்கங்களைப் போதனை செய்கின்றன.

அறிவு, அன்பு, பொறுமை, நேர்மை, தியாகம், தொண்டு ஆகிய நன்னெறிகளைச் சகல சமயத்தவரும் மக்களுக்குப் போதனை செய்தபோதிலும், மற்றவற்றைக் காட்டிலும், குறிப்பிட்ட ஒரு நெறியில் மட்டும் ஒவ்வொரு

சமயத்தவரும் அதிக கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர்; வருகின்றனர்.

மனிதன் நெறியாக வாழ்வதற்கு அறிவு—அதாவது ஞானம்—அவசியம் ஆகும். அறிவு வளர வளர, மனிதன் தன்னைப் புரிந்துகொள்கிறான்; பிறரைப் புரிந்துகொள்கிறான்; உலகத்தையும் புரிந்துகொள்கிறான்; எது நன்மை? எது தீமை? என்பதை அறிந்துகொண்டு, வாழ்க்கை நடத்த முயல்கிறான்; அப்போது தீமைகளை விலக்கிவிட்டு, நன்மைகளைக் கடைப்பிடித்து ஒழுகி மனிதன் மேன்மை அடைகிறான். ஆகவே, மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்கு அறிவு முக்கியம் என்று ஒரு சமயத்தினர் கூறுகிறார்கள்.

மற்று ஒரு சமயத்தினர், ஞானத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதைக் காட்டிலும் பக்திக்கு முதலிடம் கொடுக்கிறார்கள். ''எல்லாம் அவன் செயல்'' ''அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று கூறுகிறார்கள். எல்லாம் வல்ல இறைவனை நினைந்து நினைந்து, மனிதன் அயராது பக்தி செலுத்தி வந்தால், சிற்றுயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதற்கு உரிய மனப்பக்குவம் அவனுக்கு ஏற்படும். அதனால் ஒருவருடன் ஒருவர் அன்பாகப் பழகுவதற்கு அது அடிகோலும். ஆகவே, மனிதன் உயர்வடைய வேண்டுமானால் பக்தி அவசியம் என்று கூறுகிறார்கள்.

இன்னொரு சமயத்தினர், ஞானம், பக்தி ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஞான மார்க்கத்தாலும் பக்தி மார்க்கத்தாலும் தனிப்பட்டவர்கள் மாத்திரமே கடைத்தேற முடியும்; ஆனால், மனிதகுலம் முழுதுமே கடைத்தேறுவதற்கு அந்த மார்க்கங்களில் வழியில்லை. மனிதகுலம் முழுதும் கடைத்தேற வேண்டுமாயின், அதற்குத் தியாகமும் தொண்டு புரியும் மனப்பாங்கும் அவசியம் ஆகும் என்று கூறுகிறார்கள்.

மேலே கூறியிருக்கும் மூன்று வகையான மதக் கோட்பாடுகளில், கிறிஸ்தவ சமயத்தினர், தியாகத்துக்கும் தொண்டுக்கும் முதலிடம் கொடுத்து இருக்கிறார்கள் என்று கூறலாம்.

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்து, மனிதகுலம் உய்ய வேண்டும் என்பதற்காக, தமது இன்னுயிரையும் ஈந்து, ஒரு மகான் பெருமை பெற்றார். அவருடைய வாழ்க்கையும் அவர் செய்த போதனைகளும் புனித பைபிள் நூலில் அடங்கி இருக்கின்றன.



அந்த நூலை உலகிலுள்ள மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள். ஆண்டுதோறும் இலட்சக் கணக்கான பிரதிகளை அச்சிட்டு உலக மக்களிடையே பரப்புகிறார்கள்.

இயேசுநாதரின் போதனைகளைப் பரப்பும் பணியில் எண்ணற்ற ஆண்களும் பெண்களும் ஈடுபட்டு இருக்கிறார்கள். கல்வித் துறையிலும் மருத்துவத் துறையிலும் ஈடுபட்டு மக்கள் மனதைக் கவருகிறார்கள். தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் முதலியன நிறுவித் தொண்டு புரிகிறார்கள். தாய்நாட்டை விட்டு, உற்றார் உறவினரை விட்டு, தாய் தந்தையரை விட்டு, அயல்நாடு சென்று தியாக வாழ்க்கை வாழ்கிறார்கள்; இயேசுநாதரின் போதனைகளை ஆர்வத்துடன் பரப்புகிறார்கள்.

மருத்துவ மனைகள் நிறுவி, பிணியுற்றோரைக் குணப்படுத்துகிறார்கள்.

இப்படித் தொண்டும் தியாகமும் செய்து வாழ்க்கை நடத்தும் கிறிஸ்தவக் குருமார்களையும் கன்னித் துறவியரையும் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் நாம் காணலாம்.

''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்று பாடினார் ஒரு தமிழ்ப் பெரியார்.

பணி செய்யவும் தியாகம் புரியவும் மனிதன் பழகிக் கொண்டால், அதனால் உலகில் பூசலும், பிணக்கும், போரும்

கலகமும் குறைந்து போகும். மக்களிடையே அன்பை வளர்த்து, ஆன்ம நேய ஒருமைப்பாட்டை அது உண்டாக்கும்; உன் நாடு என் நாடு, உன் மொழி என் மொழி, உன் இனம் என் இனம் என்ற வேற்றுமை உணர்வு மங்கி மறைந்து போகும். ''ஒன்றே குலம், ஒருவனே தேவன்'' என்ற உளப்பாங்கு உண்டாகும்.

இத்தகைய ஒரு உளப்பாங்கை உண்டாக்க, ஒரு மகான் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்தார்.

அவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்? அவர் எதற்காகத் தியாகம் செய்தார்? அவர் பிறந்து வளர்ந்து போதனை செய்த காலத்தில், அந்த நாட்டு மக்கள் அவரை ஆதரித்துக் காப்பாற்றிப் பெருமைப்படுத்தினார்களா? அல்லது கொடுமைப்படுத்திக் கொன்றுவிட்டார்களா?

இந்த விவரங்களை எல்லாம் அடுத்து வரும் அத்தியாயங்களில் நாம் படிக்கப் போகிறோம்.

ஒரு மத நூலையோ, அல்லது மத ஸ்தாபகரின் வாழ்க்கையையோ படிக்கும்போது, விருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடாது, உள்ளத்தைத் தூயதாக்கிக்கொண்டு படிக்க வேண்டும்.

அவ்வாறு மனத்தைப் பக்குவப்படுத்திக்கொண்டு, பின் வரும் அத்தியாயங்களைப் படிக்குமாறு, வாசக அன்பர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நிச்சய தார்பூலம்

உலகில் இருக்கும் ஆறு கண்டங்களில் ஆசியாதான் பெரிய கண்டம். நிலப்பரப்பிலும் சரி, ஜனத்தொகையிலும் சரி, ஆசியா கண்டத்தைக் காட்டிலும் பெரிய கண்டம் வேறு கிடையாது.

பண்பாட்டுத் துறையிலும் சரி, கலைத் துறையிலும் சரி, சமயத் துறையிலும் சரி, ஆசியா கண்டம்தான் முன்பு

முன் அணியில் நின்றிருக்கிறது. இதனால்தான் இதுவரை உலகில் தோன்றியுள்ள மதங்கள் அனைத்தும் ஆசியா கண்டத்தில் மட்டுமே தோன்றியுள்ளன. இந்து சமயம், பௌத்த சமயம், கிறிஸ்தவ சமயம், யூத சமயம், இஸ்லாமிய சமயம் ஆகிய ஐந்து சமயங்களுக்கும் ஆசியா கண்டம்தான் தாயகம்.

இந்து சமயமும் பௌத்த சமயமும் இந்தியாவில் தோன்றி, ஆசியாவிலுள்ள மற்ற நாடுகளுக்குப் பரவி உள்ளன.

யூத சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாமிய சமயம், இந்த மூன்று சமயங்களும் அராபியாவிலும் பாலஸ்தீனத்திலும் தோன்றி, மற்ற நாடுகளுக்குப் பரவி இருக்கின்றன.

நடுநாயகமான ஓர் இடத்தில் பாலஸ்தீனம் என்று ஒரு நாடு ஆசியாவில் இருக்கிறது. அந்த நாடு சிறிய நாடு. ஆனால் வளம் கொழிக்கும் நாடு. ஆறுகளும் சோலைகளும் மலைகளும் அந்த நாட்டில் மிகுதியாக உண்டு.

முன்பு இந்த நாட்டில் வாழ்ந்த மக்களை யூதர் என அழைப்பார்கள். இவர்கள் தங்கள் மூதாதையரின் சமயமான யூத சமயத்தைப் பின்பற்றி வந்தார்கள்.

அந்தக் காலத்தில், அதாவது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், பாலஸ்தீனத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து, ரோமர்கள் ஆண்டு வந்தார்கள்; வட பகுதியைக் கலிலேயா என்றும், தென் பகுதியை யூதேயா என்றும், நடுப் பகுதியைச் சமாரியா என்றும் அழைத்தார்கள்.

ரோமப் பேரரசை அகஸ்டஸ் சீசர் என்னும் சக்ரவர்த்தி ஆண்டுவந்தார். பாலஸ்தீன நாட்டைத் தம் சிற்றரசர்கள் மூலம் அடக்கி ஆண்டு, அதிகாரம் செலுத்தி வந்தார்.

அன்னியனுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த யூத மக்கள் அல்லும் பகலும் அஞ்சி அஞ்சி வாழ்ந்தார்கள். ஆக்கமும் ஊக்கமும் இழந்து, அடிமைகள் போல் வாழ்க்கை நடத்தினார்கள். ஆண்டவன் ஒருவனைத் தவிர்த்து வேறு யாராலும் இந்த அவல நிலையிலிருந்து தங்களைக் காப்பாற்ற முடியாது என்றும், அவன் அருள் சுரந்தாலன்றி, தங்களுக்கு விமோசனம் கிட்ட வழியில்லை என்றும் நம்பிக்கொண்டு,

பாலஸ்தீனத்தில் வாழும் யூத மக்கள் நாளையும் பொழுதையும் கழித்து வந்தார்கள்.

பாலஸ்தீன நாட்டின் வட பகுதிக்குக் கலிலேயா நாடு என்று பெயர். இந்தப் பகுதியில் குன்றுகளுக்கும் பள்ளத்தாக்குகளுக்கும் குறைவில்லை. அதனால் ஓடைகளும் சிற்றாறுகளும் இங்கு அதிகம்.

எப்பொழுது பார்த்தாலும் இந்தப் பகுதி வனப்புமிக்கதாயும் பசுமையாயும் இருக்கும். செடிகளும் கொடிகளும் மரங்களும் மலர்களும் காய்களும் கனிகளும் மிகுந்து, பார்ப்பவர் மனதைப் பரவசமடையச் செய்யும்.

மாதுளம் கனிகள் வேண்டுமா? எவ்வளவு வேண்டுமானாலும் கலிலேயா நாட்டில் கிடைக்கும்; ஆப்பிள் பழங்கள் வேண்டுமா? கூடை கூடையாய்க் கிடைக்கும். திராட்சைப் பழங்கள் வேண்டுமா? அதற்கும் குறைவில்லை; கொத்துக் கொத்தாக எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கும்.

பள்ளத்தாக்குகள், கண்களுக்கு விருந்தாய் அமைந்து, பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத இன்பத்தைக் கொடுக்கும். ரோஜா மலர்களும் அழகான லில்லி மலர்களும் வண்ண வண்ணமான இதர மலர்களும் நறுமணத்தை எப்பொழுதும் பரப்பிக்கொண்டிருக்கும்; வண்டுகள் ரீங்காரம் செய்து வந்து, மலர்களிலிருந்து தேனைச் சேகரித்துச் செல்லும்.

ஆட்டு மந்தைகளும் மாட்டு மந்தைகளும் பசும் புல்லை மேய்ந்துவிட்டு, ஆங்காங்கே தென்படும் மர நிழலில் படுத்து ஓய்வெடுத்துக்கொள்ளும். காட்டுக்குள் இருக்கும் தம் குஞ்சுகளுக்கு, தாய்ப் புறாக்கள் இரை தேடி எடுத்து வந்து ஊட்டிக்கொண்டிருக்கும்.

கலிலேயா நாட்டில் பாலும் தேனும் ஆறாக ஓடிற்று என்றால் அது மிகையாது.

இப்படி வளம் கொழிக்கும் கலிலேயா நன்னாட்டில், நாசரத் என்று ஒரு சிற்றூர் உண்டு. அந்த ஊரில் சுமார் முப்பத்தைந்து வயதைக் கடந்த ஏழைத் தச்சர் ஒருவர் இருந்தார்.

சிறு பிராயத்திலேயே தாய் தந்தையரை இழந்த அவர், தன்னந் தனியாக இருந்து வாழ்க்கை நடத்தி வந்தார்.

இந்தத் தச்சர் மிகவும் நல்லவர். நாணயமானவர். ஆண்டவனுக்கு அஞ்சி நடப்பவர். பாடுபட்டு உழைத்துச் சம்பாதித்து, பண்போடு வாழும் பழக்கமுள்ளவர். யூத சமய நூல்களிலும் பரிச்சயமுள்ளவர். இந்தத் தச்சரை, அந்த ஊர் மக்கள் சோசப் என்று சொல்லி அன்போடு அழைத்தார்கள்



கதவுகள், ஜன்னல்கள், கலப்பைகள், பெட்டிகள், முதலியன செய்து கொடுத்து, சோசப் வயிறு வளர்த்து வந்தார். ரோமானியர்களையும் செல்வந்தர்களையும் எதிர்த்து நடக்கும் கிளர்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருந்து, வாழ்க்கை நடத்தினர்.

சோசப்புக்கு நெருங்கிய உற்றார் உறவினர் இருந்தனரோ இல்லையோ தெரியவில்லை. அவரை ஆதரித்துக் காப்பாற்றிய சிற்றப்பா இறந்து சில ஆண்டுகள் கடந்து விட்டன. ஆகவே, திருமணம் செய்துகொண்டு வாழ்க்கை நடத்த அவர் தீர்மானித்தார்.

சோசப்பின் கடை இருக்கும் தெருவின் கடைக்கோடியில் ஒரு குடும்பத்தார் வசித்தார்கள். தெற்கே யூதேயா நாட்டின் தலைநகரான ஜெருசலத்திலிருந்து, வடக்கே இருக்கும் நாசரத்துக்கு வந்து குடியேறி, இந்தக் குடும்பத்தார் வசித்து வந்தார்கள்.

இந்தக் குடும்பத்தில் பதினைந்து ஆண்டுப் பிராயமுடைய எழில் நங்கை ஒருத்தி இருந்தார். இந்தப் பெண்ணைப்

போல் நற்பண்புகள் பெற்ற, வேறு ஒரு கன்னியை இந்த அவனி எங்கும் தேடினாலும் காண முடியாது. கள்ளம் கபடம் இல்லாத களங்கமற்ற உள்ளம்; கருணை சுரக்கும் கண்கள்; பணிவும் பண்பும் நிறைந்த பேச்சு; அடக்கமும் அமைதியும் நிறைந்த நடை; தெய்வீக ஒளிவீசும் திருவதனம்; அன்புகனிந்த பார்வை; பார்த்தவர் உள்ளங்களில் எல்லாம் புனிதமான எண்ணத்தைத் தவிர்த்து, வேறு எந்தச் சிந்தனைக்கும் இடம் கொடாத இனிய தோற்றம். இந்தப் பெண் மணியை மகளாகப் பெற இவளுடைய பெற்றோர் என்ன தவம் செய்திருப்பார்களோ என்று, பார்த்தவர் எவரும் போற்றிப் புகழத்தக்க புனிதம் வாய்ந்த நடையுடை பாவனைகள்.



இந்தப் பெண்மணியை அவளுடைய பெற்றோர் அன்புடன் மேரி என்று அழைத்தார்கள். மேரியினுடைய தாயின் பெயர் அன்னு; தந்தையின் பெயர் ஜோக்கிம். நெடுங் காலம் தவம் இருந்து, தங்களுக்கு அரிதில் கிடைத்த குழந்தையாதலால் மேரியை அவளுடைய பெற்றோர் அருமையோடும் பெருமையோடும் பேணி வளர்த்தார்கள்.

புனிதம் வாய்ந்த இந்த மேரியின் திருவயிற்றில் கருவாகி உருவாகி வளர்ந்து, தாம் உலகில் பிறக்க வேண்டும் என்று இறைவனே திருவுளம் கொண்டார் என்றால், கன்னி மேரியின் மேன்மையையும் சிறப்பையும்பற்றிப் பேச நமக்கு என்ன அருகதை இருக்கிறது?

கிணற்றில் தண்ணீர் எடுத்து வரும் பொருட்டு, புனிதம் நிறைந்த இந்த மேரி குடத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, சோசப் கடை இருக்கும் வழியாக நாள்தோறும் போவாள்.

மேரியின் நடையுடை பாவனைகள் சோசப்புக்கு மிகவும்

பிடித்திருந்தன. 'இந்தப் பெண் எனக்கு வாழ்க்கைத் துணைவியாய் வாய்த்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்?' என்று சோசப் தமக்குத் தாமே எண்ணிக்கொண்டார்.

இந்த எண்ணம் ஆசையாய் மலர்ந்து, மேரியின் பெற்றோரை அணுகும்படி செய்தது.

ஆகவே, ஒரு நாள் காலையில் இனிப்புத் தின்பண்டங்கள் சிலவற்றைத் தம் கையில் எடுத்துக்கொண்டு, மேரியின் பெற்றோரிடம் சென்றார் சோசப்.

மேரியின் தந்தை சோசப்பை வரவேற்றார். தன் மனைவி அன்னாவிடம் அழைத்துச் சென்று, ''சோசப் நல்ல மனிதர். நாணயமானவர். தன்னந் தனியாய் இருக்கும் இவர் தகுந்த பெண் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ளப் பிரியப்படுகிறார்'' என்று சொன்னார்.

''தன்னந் தனியாய் இருந்து இதுவரை எப்படியோ வாழ்க்கை நடத்திவிட்டேன். இனியாவது தகுந்த பெண் ஒருத்தியைத் திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கை நடத்த என் உள்ளம் விரும்புகிறது. தங்கள் புதல்வி மேரி குடும்பத்தைத் திறம்பட நிர்வகிப்பாள் என்பதில் ஐயம் இல்லை. ஆகவே, அவளை எனக்கு .....''

மேலும் தொடர்ந்து பேச முடியாது நாணப்பட்டு, சோசப் அத்துடன் நிறுத்திக்கொண்டார்.

மேரியின் பெற்றோர் விவரத்தைப் புரிந்துகொண்டார்கள். சோசப்புக்குத் தங்கள் புதல்வி மேரியைத் திருமணம் செய்து கொடுக்க இசைந்தார்கள்.

தங்கள் புதல்வியைக் கூப்பிட்டு, சோசப்புக்கு அவளைத் திருமணம் செய்து கொடுக்கத் தாங்கள் நிச்சயித்து இருப்பதை மேரியிடம் தெரிவித்தார்கள்.

சம்மதம் என்பதற்கு அறிகுறியாக மலர்ந்த முகத்துடன் மேரி மௌனமாய் இருந்தாள்.

தமது திருமணத்தை இவ்வாறு நிச்சயம் செய்துகொண்டு, சோசப் தமது இல்லம் திரும்பினார்.

வான தூதரின் அறிவிப்பு

நிச்சயம் செய்துகொண்டபின், யூதர்கள் உடனடியாகத் திருமணத்தை முடிப்பது வழக்கம் இல்லை; ஏழு எட்டு, பத்து மாதங்களுக்குப் பின்னர்தான் அவர்கள் திருமணத்தை முடிப்பார்கள். அதுவரை மணமகள் தன் தாய் வீட்டில் இருப்பாள்; மணமகன் தன் வீட்டில் இருப்பான்.

இந்த வழக்கப்படி மேரி தன் தாய் வீட்டில் இருந்தாள். சோசப் தமது இல்லத்தில் வசித்தார்.

நிச்சய தாம்பூலம் முடிந்து சில தினங்களுக்குப் பின்னர், மேரியின் வாழ்க்கையில் எதிர்பாராத சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. அந்தச் சம்பவத்தின் பயனாய் மனித சமுதாய சரித்திரத்தில் மகத்தான பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கோடானகோடி மக்கள் அதன் விளைவால் மன அமைதியும் நிறைவும் பெற்று வாழ்க்கை நடத்துகிறார்கள்.

தெய்வீக சம்பந்தமான இந்தச் சம்பவம் எதற்காக நடந்தது? எப்படி நடந்தது? என்பதைப்பற்றி இனிக் கவனிக்கலாம்.

• • •

இந்த மண்ணுலகில் மனிதன் வாழத் தொடங்கி, எத்தனை யுகங்கள் ஆகின்றன என்பதை யாராலும் அறுதியிட்டுச் சொல்ல முடியாது; ஆயினும் பல யுகங்களாகவே, மனிதன் இந்த மண் உலகில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வந்துள்ளான் என்று நிச்சயமாகக் கூறிவிடலாம்.

இப்படிப் பல யுகங்களாக இந்த மண் உலகில் பிறந்து வாழ்ந்து மறைந்துவிட்ட மக்களின் வாழ்க்கை நிலையும் மனநிலையும் எப்பொழுதும் ஒன்று போலவே இருந்தனவா? அல்லது வேறுபட்டு இருந்தனவா?

புராதன காலம் தொட்டு, மக்களிடையே நாகரிகமின்றிக் காட்டுமிராண்டிகளாய் வாழ்ந்தவர்களும் இருந்திருக்கின்றனர். நாகரிகத்தில் மிக மிக முன்னேறியவர்களும் இருந்திருக்கின்றனர்; எழுத்தறிவு இன்றி, கல்வி அறிவு இன்றி, விஞ்ஞானமின்றி வாழ்ந்தவர்களும் இருக்கின்றனர்;

அறிவிலும் விஞ்ஞானத்திலும் மிக வளர்ந்தவர்களும் இருந்திருக்கின்றனர்.

வாழ்க்கை நிலையில் இப்படி ஏற்றத் தாழ்வு காணப்படினும், மனநிலையைப் பொறுத்த மட்டில் தொன்று தொட்டே மக்கள் ஒரே நிலையில்தான் இருந்து வந்திருக்கிறார்கள் என்பது, சரித்திர மூலம், தெரிய வருகிறது. மனிதனின் உள்ளரங்க அனுபவங்கள் எக்காலத்திலும் ஒன்றுபோலவே இருந்து வந்திருப்பதை நாம் காண்கிறோம்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மனிதன் அனுபவித்த அதே பலவீனத்தைத்தான் இன்றும் மனிதன் தன் உள்ளத்தில் உணர்கிறான்; அனுபவிக்கிறான்.

நன்மை செய்ய விருப்பம்; ஆனால், செய்வதற்கு ஒரு வித பலவீனம்; அரிய செயல்களைச் செய்ய ஆவல், ஆனால் போதிய ஆற்றல் இன்மை; புண்ணியம் செய்ய வேண்டும் என்ற ஆசை, ஆனால் இறுதியில் பாவத்தையே செய்தல்; தீய எண்ணங்களைத் தவிர்க்க வேண்டும் என்ற தீர்மானம், ஆனால் இறுதியில் அவற்றுக்கு அடிமையாதல்; பிறருக்கு நன்மை செய்ய விரும்புதல், ஆனால் பலருக்குத் தீமையே செய்தல்; தன் உள்ளுணர்ச்சிகளை அடக்க வேண்டும் என்று நினைத்தல், ஆனால், தான் அறியாமலே அவற்றுக்கு வசமாதல்; அன்பு செய்ய ஆவம, ஆனால் அதற்கு ஏற்ற முறையில் ஒழுக மறுத்தல்.

இவை யாவும் மனித இனத்தைச் சார்ந்த அனைவருக்கும் பொதுவாயுள்ள உள்ளரங்கம் என்பதை நாம் அறிகிறோம்.

கோபம், காமம், பொறாமை, தன்னலப்பான்மை, கர்வம், பழிமனம், ஆகியவற்றால் மனிதனிடம் நிகழும உள்ளரங்கப் போராட்டம், இன்றைய மனிதனிடம் மட்டுமல்ல, மனிதன் என்று இந்த உலகில் தோன்றினானோ, அன்றிலிருந்தே இருந்து வருகிறது.

மனிதன் மனிதனை எதிர்த்தும், ஒரு குலத்தார் வேறு குலத்தாரை எதிர்த்தும், ஒரு நாட்டினர் வேறு நாட்டினரை எதிர்த்தும் நிகழ்த்தியுள்ள போர்கள், பூசல்கள், கலகங்கள், கொலைகள், முதலியன தொன்று தொட்டே மனிதனிடம்

இருந்துவரும் உள்ளரங்கப் போராட்டத்துக்கு வரலாறு காட்டும் சான்றுகள் ஆகும்.

இன்று, அறிவின் துணைகொண்டு விஞ்ஞானத் துறையில் மனிதன் எவ்வளவோ முன்னேறி யிருக்கிறான். வான வெளியில் சஞ்சரிக்கிறான்! தொலைபேசி, தொலைநோக்கி, இவற்றைப் பயன்படுத்துகிறான்; இந்த அளவுக்கு மனித நாகரிகம் முன்னேறி யிருந்தபோதிலும் அவனுடைய உள்ள ரங்க மனநிலை அன்று இருந்தது போலவே, இன்றும் இருந்து வருகிறது.

இப்படி ஒரு நிலை நிலவக் காரணம் என்ன? கடவுளின் கட்டளையை மீறி, ஆதி மனிதன் செய்த பாவத்தின் விளைவே இது என்று கிறிஸ்தவம் போதனை செய்கிறது.

ஆதியில் கடவுள் மனிதனைப் படைத்தபோது, அவனுக்கு, தம் அருள் என்னும் தெய்வீக நன்கொடையை வழங்கினார்; அதன் விளைவாக அவன் மாசற்றவனாய் இருந்தான். புலன் உணர்வுகள், அவனுடைய அறிவுக்குக் கட்டுப்பட்டு இயங்கின; இப்படி இயங்க, இறைவனுடைய திருவருளும் அவனுக்குத் துணை நின்று வந்தது.

ஆயினும, மனிதன் என்ற முறையில் அவன் குறை பாடுள்ளவனாகவே இருந்தான். இந்தக் குறைபாட்டின் காரணமாக, கடவுளின் கட்டளையை மீறி நடந்து, மனிதன் பாவம் செய்தான்.

அந்தப் பாவத்தின் பயனாய், இறைவனின் அருள் நட்பில் படைக்கப்பட்டவன், அவரது நட்பை இழந்தான்.

ஆதி மனிதனுக்கு நிகழ்ந்த இந்தப் பெருங் குறை, அவனுடைய சந்ததியாரையும் சாடிற்று; இறைவனின் அருள் நட்பை இழந்து, அனைவரும் பாவிகள் ஆயினர்.

இந்த நிலையையே ஜென்மப் பாவம் என்று கூறுவர், கிறிஸ்தவ சமயத்தினர்.

இப்படி இறைவனின் அருளை இழந்து, நட்பை இழந்து, பாவத்துக்கு அடிமையாகி, அல்லலுற்றுத் தவிக்கும் மனித இனத்தை ஈடேற்றம் செய்யும் பொருட்டே, கடவுள் மனிதனாகி, இயேசு கிறிஸ்து என்னும் பெயரில் இந்த

மண்ணுலகில் அவதரித்தார் என்பது கிறிஸ்தவ சமயத்தினரின் கொள்கை யாகும்.

* * *

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூத மக்கள் அரசியல் துறையிலும் சரி, பொருளாதாரத் துறையிலும் சரி, பின்தங்கி, பெரிதும் அவதிப்பட்டார்கள். ரோமானியர்கள் பாலஸ்தீன யூதர்களை அடக்கியாண்டு அதிகாரம் செலுத்தினார்கள். கிரேக்கர்கள் வாணிபத் துறையில் முன்னேறி, யூதர்களைப் பொருளாதாரத் துறையில் நசுக்கினார்கள். மேல் நிலையிலும் குருமார்களாயும் இருக்கும் யூதர்கள், ரோம அதிகாரிகளுடன் சேர்ந்துகொண்டு, தங்கள் இனத்தவர்களையே வஞ்சித்து வாழ்க்கை நடத்தினார்கள்.

இதனால் நாடு செழிப்பாய் இருந்தும், யூத மக்கள் நல்ல முறையில வாழ முடியவில்லை. ஆக்கமும் ஊக்கமும் இழந்து, அவதிப்பட்டார்கள். தங்களுக்கு ஈடேற்றமே இல்லையா, தாங்கள் எதிர்பார்த்த மீட்பர், தங்களிடையே அவதரித்து இந்தக் கொடியவர்களின் பிடிப்பிலிருந்து தங்களை விடுவிக்க மாட்டாரா என்று ஏங்கினார்கள். பத்து ஆண்டு, இருபது ஆண்டுகளுக்கிடையே ஏற்பட்ட ஏக்கம் அன்று இது; நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக இத்தகைய ஒரு ஏக்கத்துடன் யூத மக்கள் வாழ்ந்து வந்தார்கள்.

யூத மக்களுக்கு இருக்கும் ஏக்கத்தையும் அவதியையும் இறைவன் அறியாதவர் அல்லர். காலம் வரட்டும் என்று இறைவன் காத்திருந்தார். தக்க காலமும் வந்தது. தாம் சென்று யூத மக்களிடையே அவதரித்து, யூத மக்களை உய்விக்க இறைவன் திருவுளம் கொண்டார்.

இறைவனே இங்ஙனம் மானுடராய் இந்த மண்ணுலகில் பிறப்பதற்கு ஒரு மாதா வேண்டுமே?' எந்தப் பெண்ணைத் தம் மாதாவாய் இறைவன் தேர்ந்தெடுத்தார்? அந்த மா பெரும் பேற்றைப் பெற்ற பாக்கியவதி யார்?

தச்சர் சோசப்புக்கு நிச்சயம் செய்திருக்கும் கன்னி மேரியைத்தான் தம் மாதாவாக இறைவன் தேர்ந்தெடுத்தார்.

திருமண நிச்சயம் செய்துகொண்ட சிறிது காலத்துக்குப்

பின்னர், ஒரு நாள் இரவு, வழக்கப்படி மங்கலான வெளிச்சமுள்ள ஒரு அறையில் கன்னி மேரி மண்டியிட்டு, அந்தரங்க சுத்தியோடு இறைவனை வழிபட்டுக்கொண்டிருந்தாள்; மெய் மறந்து, முழு மனத்துடன் இறைவனை அவள் தியானம் செய்தாள்.

என்ன ஆச்சரியம்! அப்போது அவள் இருந்த அறை தெய்வீக ஒளி வெள்ளத்தால் பிரகாசித்தது. அந்த அறையிலே வானதூதர் ஒருவர் தோன்றி, மேரியின் முன்னே நின்றார். அவர் மேரியை நோக்கி, மிக்க மரியாதையுடன், ''அருள் வெள்ளத்தில் திளைக்கும் அம்மையே! நீர் வாழ்க!'' என்று கம்பீரமான தொனியில் மேரியை வாழ்த்தினார்.



அறிமுகமில்லாத ஒருவர் வந்து தன்னை இப்படிக் கம்பீரமாக வாழ்த்துவதைச் செவிமடுத்த மேரி, முதலில் ஒன்றும் புரியாது திகைத்தாள். அச்சம் மேலிட்டு மௌனமாய் இருந்தாள்.

மேரியின் மனநிலையைத் தேவ தூதர் புரிந்துகொண்டார். ''தாங்கள் அஞ்ச வேண்டாம், எல்லாம் வல்ல இறைவன் தங்கள்பால் கருணை சுரந்து இருக்கிறார். மாதர்களுக்குள்ளே நீர் மகா பாக்கியசாலி. உம்மைக் காட்டிலும் மேலான மாதர் யாரும் இல்லை'' என்று கூறினார்.

கபிரியல் என்னும் அந்த வானவர் இவ்வாறு கூறியதும்

கண்களை மூடிக்கொண்டும் கைகளைக் கட்டிக்கொண்டும் தலை குனிந்தவாறு மரியாதையுடன் மௌனமாய் இருந்தாள் மேரி. அவளுடைய அங்கமெல்லாம் பயத்தால் நடுங்கின.

அப்போது அந்த வானவர் மீண்டும் மேரியைத் தைரியப் படுத்திக்கொண்டே, ''அம்மையே! இறைவன் தங்களுடைய திருவயிற்றில் கருவாகி, உருவாகி, குழந்தையாய் அவதரிக்கப் போகிறார். பிறக்க இருக்கும் அந்தக் குழந்தைக்குத் தாங்கள் இயேசு என்று பெயரிடுங்கள். தங்களுக்குப் பிறக்கும் அந்தக் குழந்தை பெரிய மகானாய் விளங்குவார்; மக்கள் எல்லாரும் அவரை, ஆண்டவனுடைய குமாரன் என்று அழைப்பார்கள். யூதர்களுக்கு அரசராய் இருந்த தாவீது அரசரைப் போல் இவரும் அரியணையில் வீற்றிருப்பார். ஆயினும் இவருடைய ராஜ்யம், மற்ற அரசர்களின் ராஜ்யங்களினின்றும் பெரிதும் வேறுபட்டிருக்கும் மேன்மையுடன் விளங்கப் போகும் இவருடைய ராஜ்யத்துக்கு ஒரு முடிவு என்பதே இராது, என்றைக்கும் அது நிலைத்து இருக்கும்'' என்று கூறினார்.

வான தூதர் கபிரியல் இவ்வாறு கூறியதும், கன்னி மேரி பயபக்தியுடன் அவரை நோக்கி, ''ஐயா! இது எவ்வாறு சாத்திய மாகும்? நானோ கன்னிப் பெண் ஆயிற்றே,'' என்று நடுக்கத்துடன் சொன்னாள்.

''அம்மையே! இறைவன் திருவுளம் பற்றினால் ஆகாதது ஒன்றும் இல்லை. பரிசுத்த ஆவியின்* மூலம் இறைவன் உம்மிடத்தே கருவை உண்டுபண்ணுவார்'' என்று கூறினார் வான தூதர்.

''நான் இறைவனுடைய அடியாள்; அவருடைய திருவுளப்படி நடப்பது அடியாளின் கடமை'' என்று மட்டும் மேரி பதில் சொன்னாள்.

அந்தக் கணமே வான தூதர் கபிரியல் அந்த இடத்திலிருந்து மறைந்து போனார்.

---

*பரிசுத்த ஆவி: ஆண்டவனுடைய ஒரு அம்சம். இதை இஸ்பிரித்து சாந்து என்றும் அழைப்பார்கள்.

அதிசய சம்பவம்

இந்தச் சம்பவம் நடப்பதற்குச்சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர், மேரியின் பெரியம்மா புதல்வி எலிசபெத் என்பவள் வாழ்க்கையில் அதிசயமான ஒரு சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவத்தைப்பற்றி, இங்கு சிறிது விரிவாக நாம் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

ஜெருசல நகரில் இருக்கும் தேவாலயமே யூதர்களுக்கு முக்கிய தேவாலயம் ஆகும. அந்தத் தேவாலயத்துக்கு, மக்கள், கூட்டமாக வந்து ஜெபம் செய்வது வழக்கம். பலி யிட்டுத் தூபம் காட்டும் சடங்கை, யூத குரு ஒருவர் முன் நின்று செய்து முடிப்பார்

மேரியின் பெரியம்மா புதல்வி எலிசபெத் அதிக வயதான வள். மேரியைவிட, சுமார் நாற்பது வயது மூத்தவள்; அவ ளும் அவளுடைய வயோதிகக கணவன் சக்ரியாவும் ஜெரு சலத்துக்குப் பாகத்தில இருக்கும் அயின் கரீம் என்னும் ஒரு சிறு கிராமத்தில் வசித்து வந்தார்கள்.

அந்தச் சிறு கிராமத்தில் இருக்கும் யூதரின் சிறிய தேவா லயம் ஒன்றில், சகரியா குருவாய் இருந்தார். அதன் மூல மும் மக்களுக்குச செய்யும் மற்ற வைதீகச் சடங்குகளின் மூலமும் தமக்குக் கிடைக்கும் சொற்ப வருவாயைக் கொண்டு, சகரியாவும் அவர் மனைவி எலிசபெத்தும் காலத்தை அமைதியாகக கழித்து வந்தார்கள்.

இந்தச் சதிபதி இருவரும ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை, அயின் கரீமிலிருந்து நாசரத்துக்கு வந்து, எலிசபெத்தின் சிறிய தாய் அன்னாவின் இல்லத்தில் தங்கி அளவளாவுவது உண்டு.

இப்படி ஒரு சமயம் எலிசபெத்தும் அவள் கணவன் சக்ரியாவும் நாசரத்துக்கு வந்திருந்தபோதுதான், சோசப் புக்கும் மேரிக்கும் நிச்சய தாம்பூலம் நடைபெற்றது.

அதன் பின்னர், மேரியும் அவள் பெற்றோரும், எலிசபெத் துடனும் சகரியாவுடனும் சேர்ந்து அயின் கரீம் கிராமத்

துக்குச் சென்றனர். அந்தக் கிராமம் ஜெருசலம் தேவாலயத்துக்கு வெகு சமீபத்தில் இருந்தது.

இது சமயம் ஜெருசலம் தேவாலயத்தில் பலி கொடுக்கும் நாள் வந்தது. மக்கள் எல்லாரும் திரள் திரளாக ஜெருசலம் தேவாலயத்துக்கு வந்தார்கள். ஆகவே, மேரியும் அவள் தாய் தந்தையரும் எலிசபெத்தும் சக்ரியாவும் ஜெருசலம் தேவாலயத்துக்குப் போனார்கள்.

ஜெருசலம் ஆலயத்தில் யார் வழிபாடு நடத்த வேண்டும் என்பதை அறிய, திருவுளச் சீட்டுப் போட்டு, குலுக்கி எடுப்பார்கள்; எந்தக் குருவின் பெயர் சீட்டில் எடுபடுகிறதோ அவர்தான் அது சமயம் தூபம்காட்ட வேண்டும் என்பது நடைமுறைச் சம்பிரதாயம்.

அந்தச் சம்பிரதாயப்படி சீட்டுக் குலுக்கிப் போட்டு எடுத்தபோது, சக்ரியாவின் பெயர் சீட்டில் விழுந்தது.

எனவே, அந்தப் பணியைச் செய்வதற்கு, சக்ரியா புனித ஸ்தலத்துக்குச் சென்றார்.

முற்றத்தில் வெளியே திரளாக இருந்து, ஜனங்கள் ஜெபம் செய்துகொண்டிருந்தார்கள்.

பரிசுத்த ஸ்தலத்துக்குள் தூபம் காட்டப்போன சக்ரியா நெடுநேரம் ஆகியும் திரும்பவில்லை. பின்னர், உள்ளேயிருந்து திரும்பி வந்தவர், வாய் பேச முடியாதபடி, ஊமையாய் வந்து சேர்ந்தார். அவருடைய உடம்பு எல்லாம் நடுங்கிற்று. முகத்தில் பீதி படிந்திருந்தது.

முற்றத்தில் இருந்த ஜனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு காரணம் கேட்டார்கள்.

தம்மால் பேச முடியாது என, சக்ரியா சைகை மூலம் காட்டினார்.

இந்த நிலையைக் கண்டதும் சக்ரியா மனைவி எலிசபெத்தும் மேரி முதலான உறவினர்களும் முதலில் பதறிப்போனார்கள் தாமதியாது சக்ரியாவை வீட்டுக்கு அழைத்துப் போய் ஆசுவாசப்படுத்திக் காரணம் கேட்டார்கள்.

நீண்ட நெடுங் காலமாகவே தீர்க்கதரிசி ஒருவர் தங்களிடையே தோன்றுவார் என்று யூதர்கள் நம்பிவந்தார்கள்

என்பதையும், அவர் பிறப்பதை எதிர்பார்த்து ஏங்கி இருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம்.

சக்ரியாவும் அவர் மனைவி எலிசபெத்தும் நெடுங்காலம் இல்லற தருமத்தை நடத்திவந்தும், அவர்களுக்குக் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லை. அவர்கள் இருவருமே எவ்வளவோ தவம் புரிந்தார்கள். இறைவனைத் துதித்தார்கள். யூதர்களிடையே தோன்றும் தீர்க்கதரிசி தங்களுக்கு மகவாய் வர வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். ஆசைப்பட்டு ஆசைப்பட்டு, இருவரும் கிழவர்கள் ஆகிவிட்டார்கள்; நாளாக நாளாக இருவருக்கும் நம்பிக்கை குறைந்து போயிற்று. இனித் தங்களுக்குக் குழந்தையே பிறக்காது என்ற முடிவுக்கு வந்து, ஆசையை விட்டொழித்துவிட்டு அமைதியாக வாழ்க்கை நடத்திவந்தார்கள்.



இப்படி அவர்கள் வாழ்ந்து வந்த சமயம் தான் தகனபலியின் போது சம்பிரதாயத் தூபம் காட்ட வேண்டிய பணி, சக்ரியாவுக்குக் கிடைத்தது.

அதன்படி தூபம் காட்டும் பொருட்டு, சக்ரியா பரிசுத்த ஸ்தலத்துக்குள் சென்றார். பீடத்தின் வலது பக்கத்தில் தேவ தூதர் ஒருவர் நிற்பதைக் கண்டு துணுக்குற்றார்.

இதைக் கவனித்த தேவ தூதர் அவரை நோக்கி, ''ஏ சக்ரியா! நீர் பயப்பட வேண்டாம். உமது விருப்பம் நிறைவேற ஆண்டவன் அருள்கூரந்து இருக்கிறார். உம் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கும். அந்தக் குழந்தைக்கு ஜான் என்று

பெயர் சூட்டுங்கள். அந்தக் குழந்தை நல்லவனாகவும் பிறருக்கு மகிழ்ச்சி விளைவிப்பவனாயும் இருப்பான். மக்களிடத்தில் கடவுள் நம்பிக்கை ஏற்படுமாறு செய்வான். கர்த்தர் செல்வதற்கான வழியை இவன் முன் ஆயத்தம் செய்து சித்தப்படுத்தி வைப்பான்'' என்று கூறினார்.

தேவ தூதர் கபிரியல் இவ்வாறு சொன்னதும், சக்ரியா அதை நம்பவில்லை. ''நானும் என் மனைவியும் கிழவர்கள் ஆகிவிட்டோம். இனி, எங்களுக்குக் குழந்தை பிறக்கும் என்றால், அதை நாங்கள் எப்படி நம்புவது? அதற்கு ஏதாவது அடையாளமுண்டா?'' என்று அவநம்பிக்கையுடன் கேட்டார்.

''ஏ சக்ரியா! நான் கடவுளுடைய தூதன் அவருடைய சமூகத்தில் நின்று பணிவிடை புரிபவன். நான் சொன்னதை நம்பாது என்னிடம் நீர் அடையாளம் கேட்கிறீர். உமக்கு மகன் ஒருவன் பிறக்கும்வரை நீர் ஊமையாய் இருப்பீர். அதுவே உமக்குத் தகுந்த அடையாளமாக அமையும்'' என்று கூறிவிட்டுத் தேவதூதர் மறைந்துவிட்டார்.

வாய் திறந்து பேச முடியாமல், பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே வந்தார் சக்ரியா.

இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் ஒன்றும் விடாது, தன் மனைவி எலிசபெத்துக்குச் சக்ரியா எழுதிக்காட்டினார்.

விவரங்கள் தெரியவந்ததும் எலிசபெத் ஆனந்தமடைந்தாள்.

மேரி முதலானவர்கள் பெரிதும் ஆச்சரியம் அடைந்தார்கள். ஆண்டவன் நினைத்தால் ஆகாததும் உண்டோ என அதிசயித்தார்கள்.

அருட் கொடை

இந்த அதிசய சம்பவத்தின் நினைவு மேரியின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. இது நிகழ்ந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர், தேவ தூதர் ஒருவர் வந்து தம்முன்

நிற்பதைக் கண்டதும், முதலில் மேரி சிறிது பயந்து போனாள். எனினும் ஜெருசல நகரில் சக்ரியாவுக்கு நடந்த அதிசய சம் பவத்தின் நினைப்பு வரவே, ஆண்டவன் 'மகிமையை உணர்ந்து, தேவ தூதரின் அறிவிப்புக்குத் தயக்கமின்றிப் பிறகு இசைவு தெரிவித்தாள்.

தனக்கு நேர்ந்திருக்கும் இந்தச் சம்பவத்தை யாரிடம் தெரிவிப்பது என்பது பற்றி இரவு முழுதும் மேரி யோசித்து யோசித்துப் பார்த்தாள். அயின் கரீமில் இருக்கும் தன் பெரியம்மா மகள் எலிசபெத்திடம் தெரிவித்து, இது நடப் பது சாத்தியமா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள நினைத் தாள் மேரி.

ஆகவே, பொழுது புலரும் சமயம், அயின் கரீமுக்குப் புறப்பட்டாள் மேரி.

மேரியின் உடலில் ஒரு புது மெருகும் புனிதத்தன்மையும் தென்பட்டன. முகம் தெய்வீகக் களை பொருந்தி இருந்தது. வழியிலே அவளைச் சந்தித்த பிரயாணிகள் யாவரும் மேரியின் பாவனமான தோற்றத்தையும் சாயலையும் கண்டு, மரியாதை யுடன் நடந்துகொண்டார்கள். தங்களால் இயன்ற உதவி களை மனமுவந்து அவளுக்குச் செய் தார்கள்'

வான தூதரின் அறிவிப்புக்குப் பின்னர், உள்ளத்தில் புதிய ஒரு தெம்பும் புதிய ஒரு அனுபவமும் பெற்றுத் திகழ்ந் தாள் மேரி. மூன்று நாட்கள் பிரயாணம் செய்து, சுமார் எண்பது மைல் தூரத்தைக் கடந்து, ஒரு நாள் மாலை, நேரத் தில் ஜெருசலம் நகரை அடைந்தாள் மேரி.

தம் பெரியம்மாள் மகள் எலிசபெத்தின் இல்லத்தை மேரி அடைந்த சமயம், தம் வீட்டு வாயிலில் எலிசபெத் நின்று கொண்டிருந்தாள். கருப்பமுற்றிருந்த அவளுக்கு ஆறுவது மாதம் நடந்துகொண்டிருந்தது. எதிர்பார்த்துக்கொண்டி ருந்தவர் வந்துவிட்டால் யாரும் மகிழ்ச்சி அடைவதை ஒப்ப, மேரியைக் கண்டதும் எலிசபெத் மகிழ்ச்சி அடைந்தாள். சிறிது அருகே வந்ததுமே, "மேரி! நீ வாழ்க!" என்று அவளை எலிசபெத் வாழ்த்தினாள்.

புன்முறுவல் முகத்தில் துலங்க, எலிசபெத் அருகே போனாள் மேரி.



உடனே எலிசபெத் ஆனந்தம் பொங்க அவளை நோக்கி "மாதர்களிலே நீ மகா பாக்கிய சாலி!" என்று அன்பு ததும்ப வாழ்த்தினாள்.

வான தூதர் எந்த வார்த்தைகளைக் கூறித் தன்னை வாழ்த்தினாரோ, அதே வார்த்தைகளைக் கூறி, தம் பெரியம்மா புதல்வியும் தன்னை வாழ்த்துவதைக் கேள்வியுற்று, மேரி ஆச்சரியமுற்றாள். ஆண்டவன் திருவுளம்பற்றினால் ஆகாதது ஒன்றும் இல்லை என்று, மேரி முழுக்க முழுக்க நம்பினாள். தனக்கும் தன் பெரியம்மா புதல்வி எலிசபெத்துக்கும் நேர்ந்திருக்கும் அதிசயத்தை நினைந்து நினைந்து, மேரி புளகாங்கிதம் அடைந்தாள். நாவார, மனமார, வாயார இறைவனைத் துதிக்க வேண்டும் என்று மேரியின் உள்ளம் பெரிதும் விரும்பிற்று அடியில் வரும் தோத்திரப் பாடலைச் சொல்லி, இறைவனை மேரி துதித்தாள்:

> எனது ஆத்மா இறைவனை மகிமைப்படுத்துகிறது.
>
> என்னை இரட்சிக்கும் இறைவனிடம் எனது உள்ளம் ஆனந்த பரவசமடைகிறது.
>
> ஏனெனில், தாழ்வுற்று இருக்கும் அடியாள் என்னிடம் இறைவன் கருணைபாலித்து இருக்கிறார்.
>
> இன்றுமுதல் வருங்காலத் தலைமுறையினர் அனைவரும் என்னைப் பாக்கியவதி என்று பாராட்டுவார்கள்.

வல்லமையும் புனிதமுமுள்ள இறைவன் என்பால் அற்புதங்களைச் செய்திருக்கிறார்.

தமக்குப் பயந்து நடக்கிறவர்களிடம் தலைமுறை தலைமுறையாக இறைவன் கருணை காட்டுகிறார்.

அவருடைய திருக்கரத்தின் ஆற்றல் மிகப் பெரிது. இதயத்தில் கர்வத்துடன் இருப்பவர்களை அவர் சிதறடித்தார்.

தம் பலத்தில் கர்வம் கொண்டிருந்தவர்களை, அவர்களின் ஆசனத்தைவிட்டுக் கீழே தள்ளினார்; தாழ்ந்த நிலையில் இருந்தவர்களை மேன்மைப்படுத்தினார்.

பசியால் நலிந்தோருக்கு நன்மைகள் செய்து அருள் சுரந்தார்; பணக்காரர்களை வெறுங் கையோடு அனுப்பிவிட்டார்.

தமது தாசன் இஸ்ரயேலைக் கருணைகூர்ந்து நினைவுடன் காப்பாற்றினார்.

தம் மூதாதையர் அபிரகாமுக்குச் செய்து கொடுத்த உறுதிமொழி போலவே, பிற்கால அவருடைய சந்ததியாருக்கும் செய்வதாக அவர் வாக்களித்து இருக்கிறார் *

இந்தப் பாடலைப் பாடி முடித்ததும், எலிசபெத்திடம், ''அக்கா! எனக்கு ஆண்டவன் அருள் சுரந்து இருப்பதை நீ எவ்வாறு அறிந்தாய்?'' என்று மேரி கேட்டாள்.

உடனே எலிசபெத், மேரியை அன்போடு தழுவிக்கொண்டாள். ''பெருமை பெற்றவளே! உன்னைப் பார்த்ததுமே, என் கருவில் வளரும் குழந்தை ஆனந்த மிகுதியால் துள்ளிக் குதித்தது! இதனால் உனக்கும் ஆண்டவனுடைய அருள் கிட்டி இருக்கிறது என்பதையும், அதனால் நீ சூல்கொண்டிருக்கிறாய் என்பதையும் நான் தெரிந்துகொண்டேன்; மாதர்கள் அனைவரிலும் நீ மகா பாக்கியசாலி என்பதையும் நான் புரிந்துகொண்டேன்'' என்று எலிசபெத் பதில் சொன்னாள்.

இதன் பின்னர், இருவரும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். எலிசபெத், மேரியை உபசரித்து, ஓய்வு எடுத்துக்கொள்ளச் சொன்னாள்.

---

*மேரி பாடின இந்தப் பாடலை, இன்றும் எல்லாத் திருச்சபைகளிலும் கிறிஸ்தவ சகோதரர்கள் பய பக்தியுடன் பாடி வருகிறார்கள்.

பிரயாணக் களைப்புத் தீர, மேரி சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டாள். பிறகு மேரியும் எலிசபெத்தும் அருகருகே உட்கார்ந்து அளவளாவினர்.

மூன்று மாதங்கள் கழிந்தன. வான தூதர் சொன்ன பிரகாரம், எலிசபெத் அழகிய ஆண் மகவு ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

தாயும் தந்தையும் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. இதுவரை ஒன்பது மாதங்கள் வாய் பேசாது ஊமையாய் இருந்த சக்ரியா; ''ஆண்டவனின் பெருமையே பெருமை!'' என்று மகிழ்ச்சியுடன் உறக்கக் கூவினார்.

குழந்தையை எடுத்து வந்து அதன் தந்தை சக்ரியா கையில் கொடுத்தாள் மேரி.

வாங்கிக்கொண்டு குழந்தையைச் சக்ரியா வியப்போடு பார்த்தார். முகத்தில் புன்னகை அரும்ப, குழந்தையை நோக்கியவாறே, ''ஜான்!''* என்று அன்போடு அழைத்தார் சக்ரியா.

'கருவுற்று இருக்கிறேன்'

பாலஸ்தீன மக்கள் அரசியல் துறையில், ரோமானியர்களுக்கு அடிமைகளாய் இருந்தனர். பொருளாதாரத் துறையில் கிரேக்க வணிகர்களுக்கு அடிமைகளாய் இருந்தனர். சமயத் துறையில் யூத குருமார்களுக்கு அடிமைகளாய் இருந்தனர்.

இப்படிப் பல துறைகளிலும் நசுக்குண்டு, பாலஸ்தீன ஏழை மக்கள் பெரிதும் அவதிப்பட்டனர். மகான் ஒருவர் தோன்றித் தங்களைக் காப்பாற்ற மாட்டாரா என்ற ஏக்கத்தோடும் ஆவலோடும் காத்திருந்தனர்.

---

*ஜான்: இந்தச் சொல்லுக்கு, ''ஆண்டவன் தந்த அருள்கொடை'' என்று பொருள்.

அரசியலில் அவதிப்பட்டவர்கள் பெரிய அரசியல் தலைவர் ஒருவர் தங்களிடையே தோன்றி, தங்களுக்கு விடுதலை தேடித் தருவார் என்று ஆவலோடு அவரை எதிர்பார்த்திருந்தனர்.

பொருளாதாரத் துறையில் சிக்கி முன்னேற வழி தெரியாது தவித்தவர்கள், அந்தத் துறையில் தங்களுக்கு விமோசனம் ஏற்பட, ஒரு தலைவர் தங்களிடையே தோன்றி, தங்களை உய்விக்க மாட்டாரா என்ற ஏக்கத்துடன் இருந்தனர்.

மற்றும் சிலர் தங்களிடையே தீர்க்கதரிசி ஒருவர் தோன்றி, சமயத் துறையில் தங்களுக்கு வழிகாட்டுவார் என்றும், அவர் சொற்படி நடந்தால், சகல துறைகளிலும் தாங்கள் முன்னேற முடியும் என்றும் நம்பி, வாழ்க்கை நடத்தி வந்தனர்.

இப்படி ஒரு மனநிலை நாட்டில் நிலவிய சமயம், மேரி, அயின் கரீமிலிருந்து நாசரத்துக்குத் திரும்பினாள். தன் பெற்றோரைச் சந்தித்து, எலிசபெத்துக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாகவும், ஜான் என்று அந்தக் குழந்தைக்கு அவர்கள் பெயர்சூட்டி இருப்பதாகவும், குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாகவும் தெரிவித்தாள். பரிசுத்த ஆவியின் தொடர்பினால் தான் கருப்ப முற்று இருப்பதாகவும், இரண்டாவது மாதம் கடந்து, இப்பொழுது மூன்றாவது மாதம் தொடங்கி இருப்பதாகவும் சொன்னாள்.

விவரம் தெரிய வந்து, மேரியின் பெற்றோர் முதலில் திடுக்கிட்டனர். பிறகு சிந்தனையில் ஆழ்ந்தனர். தெய்வ பக்தியுள்ள தங்கள் புதல்வி ஒருபோதும் தீய வழியில் சென்றிருக்க மாட்டாள் என்றும், ஆகவே, அவள் கூற்றில் உண்மை இருக்கக்கூடும் என்றும் நம்பி, ஆறுதல் அடைந்தனர்.

பின்னர், சோசப்பைச் சந்தித்து, தான் பரிசுத்த ஆவி மூலம் கருவுற்று இருப்பதைத் தெரிவித்தாள் மேரி.

ஒரு நாள் இரவு தங்கள் வீட்டில் தான் இருந்த சமயம், வான தூதர் கபிரியல் தன் முன்னர்த் தோன்றியது, பரிசுத்த ஆவி மூலம் தன்பால் கருப்பத்தை உண்டுபண்ண

இறைவன் திருவுளம்பற்றியது, அதைப் பிறரிடம் தெரிவிக்கத் தான் நாணமுற்று, பெரியம்மா மகள் எலிசபெத்திடம் தெரிவிக்கச் சென்றது, எலிசபெத்துக்கு, கபிரியல் கூறியபடி ஆண் குழந்தை பிறந்திருப்பது, அதற்கு அவர்கள் ஜான் என்று பெயர் சூட்டியிருப்பது, பரிசுத்த ஆவியின் மூலம் தான் கருவுற்று இருப்பது, தான் இப்பொழுது மூன்று மாதக் கருப்பிணியாய் இருப்பது, அனைத்தையும் ஒன்றும் விடாமல் சோசப்புக்கு மேரி சொன்னாள்.

மேரி சொன்னதைச் சோசப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்தார். பதில் சொல்ல விருப்பம் இன்றிச் சிந்தனையில் ஆழ்ந்தார்.

சோசப் மௌனமாய் இருப்பதைக் கவனித்த மேரி, மேலும் எதுவும் பேசாது வீடு திரும்பினாள்.

திருமணம்

இருட்டிவிட்டது. சோசப் தன் கடையில் இருந்தார். அவர் மனத்தில் கவலையும் குழப்பமும் ஆத்திரமும் ஏக்கமும் இடம்பெற்று இருந்தன ஒன்றும் செய்யத் தோன்றாது நெடுநேரம் சும்மா உட்கார்ந்து இருந்தார். "மேரி உண்மை தான் சொல்லுகிறாளா? என்மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டுவிட்டதா? அயின் கரீமுக்குப் போன பிறகு, முற்றும் மாறிப்போய் இருக்கிறாளே? ஆண் தொடர்பு இல்லாமல் ஒரு பெண் கருப்பவதியாவது சாத்தியமான காரியமா? தான் அப்படிக் கருப்பமாய் இருப்பதாய் மேரி துணிவுடன் கூறுகிறாளே! இதை உலகம் ஏற்குமா? சரி சரி. இந்தப் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டால் உலகத்தார் என்னைப் பழிப்பார்கள். ஆகவே, இவளைத் திருமணம் செய்துகொள்ளாமல் இருப்பதே உத்தமம்" என்ற முடிவுக்கு வந்தார் சோசப்.

சிறிது நேரத்துக்குப் பின்னர், சோசப்பின் மனம் வேறு விதமான சிந்தனையில் மூழ்கியது. "மேரி மிகவும் ஒழுங்கான

பெண்ணாயிற்றே! ஒரு போதும் அவள் பொய் சொன்னது இடையாதே! சூதுவாது தெரியாத அவளுக்குப் பொய் சொல்லவும் தெரியாதே! ஒரு வேளை அவள் கூற்று மெய்யாய் இருக்குமோ! ஆண்டவனுடைய அருள் பிரசாதம் அவளுக்குக் கிட்டியிருக்குமோ! எது எப்படி யிருந்தாலும் சரி, ஒரு பெண்ணுக்கு அவமானம் நேரும்படி நான் நடப்பது கூடாது திருமணம் செய்துகொண்டாலும் எனது ஆண்மைக்கு அது அடுக்காது. ஆகவே, மேரியை விட்டு விலகி இருந்துகொள்வதே உத்தமம்'' என்று எண்ணினார்.

இப்படி மனம் குழம்பிக் கவலையோடு இருந்த காரணத்தால், அன்று இரவு சோசப் சாப்பிடவில்லை. ஒன்றுமே தோன்றாது, படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டார். தூக்கமே வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தார். கவலையை மறந்து தூங்க முயன்றார், முடியவில்லை. ''ஆண்டவனே! நீர் ஏன் என்னை இப்படிச் சோதிக்கிறீர்? கன்னிப் பெண் கருப்பமுற்று இருக்கிறாள் என்று சொன்னால் அதை யாரும் நம்புவார்களா? கடவுளின் அருளினால் தான் கருப்பமுற்று இருப்பதாகத் துணிச்சலுடன் மேரி கூறுகிறாளே! அவள் கூற்றை உலகம் ஏற்குமா? உம் மெய்யடியார்கள் கலக்கமுற்றுத் தவிக்கும்போது வழிகாட்டி அவர்களுக்குள்ள கலக்கத்தை நீர் போக்காவிட்டால், வேறு யாரால் சாத்தியமாகும்? ஆண்டவனே! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! உம்மைத் தவிர்த்து, வேறு யாரிடம் சென்று நான் சரண் அடைவேன்! நான் உம் அடைக்கலம்! நான் உம் அடைக்கலம்!'' என்று படுக்கையில் படுத்திருந்தபடியே புலம்பிக் கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் தம் படுக்கைமீது சோசப் அயர்ந்து தூங்கிக்கொண் டிருந்தார். அப்போது தமக்கு இருக்கும் கலக்கத்தைப் போக்கக் கூடிய கனவு ஒன்றைச் சோசப் கண்டார்.

வான தூதர் ஒருவர் கனவில் தோன்றி, ''ஏ சோசப்! நீர் கலக்க மடைய வேண்டாம். மேரி கூறியது அனைத்தும் உண்மை. ஆண்டவன் அருளால் பரிசுத்த ஆவியின் மூலம்

மேரி கருவுற்று இருக்கிறாள். பிறந்த பின், அந்தக் குழந்தைக்கு இயேசு என்று பெயர் சூட்டுங்கள். மக்கள் அவரால் விமோசனம் அடைபவர். செய்த பாவங்கள் மக்களைவிட்டு விலகிப் போகும்!'' என்று சொல்லிவிட்டு, அந்த வான தூதர் போய்விட்டார்.



சிறிது நேரம் சென்ற பின், சோசப் கண் விழித்தார். தாம் பார்த்தது கனவா அல்லது நனவா என்ற ஐயம் அவருக்கு உண்டாயிற்று. ''கனவுதான்; சந்தேகம் இல்லை. ஆயினும், நனவைப்போல உள்ளத்தில் இது ஆழமாகப் பதிந்து இருக்கிறதே! எனது மனத்தில் இருக்கும் கலக்கத்தை அகற்ற ஆண்டவன் திருவுளம் பற்றினார் போலும்'' என்று நினைத்தார்.

உடனே பழைய ஏற்பாட்டில் இசையா கூறியிருக்கும் வேத வசனம் ஒன்று, சோசப்பின் நினைவுக்கு வந்தது: ''தாம் பிறக்க இருப்பதை ஒரு அடையாளம் மூலம் ஆண்டவன் உங்களுக்கு அறிவிப்பார். கன்னிப் பெண் ஒருத்தி இறைவனைத் தன் குழந்தையாகப் பெறுவாள்.''

இந்த வசனம் நினைவுக்கு வந்ததும், சோசப் சிறிது ஆறுதல் அடைந்தார். மேரி களங்கமற்றவள் என்பதையும், அவளைத் திருமணம் செய்துகொள்வதால் தமக்கு எவ்வித மான குறைவும் நேராது என்பதையும் சோசப் தெரிந்து கொண்டார். ஆகவே, மேரியைத் திருமணம் செய்து கொண்டு, அவள் உதரத்தில் வளரும் குழந்தையைக் காப்பது, தமது தலையாய கடமை என்றும் சோசப் கருதினார்.

எனவே, சோசப்புக்கும் மேரிக்கும் இடையில் திருமணம் நடைபெற்றது. ஒருவரை ஒருவர் அன்போடு நேசித்து, தத்தம் கடமைகளைப் பொறுப்புடன் செய்து வாழ்க்கை நடத்தினார்கள்.

சக்ரவர்த்தியின் ஆணை

திருமணம் முடிந்த பிறகு, மேரியைச் சோசப் தம் இல்லத்துக்கு அழைத்துக்கொண்டார். அங்கே இருவரும் அமைதியாகவும் ஆனந்தமாகவும் வாழ்க்கை நடத்தினார்கள்; தங்கள் இருவர்பாலும் ஒரு பெரும் பொறுப்பை ஆண்டவன் அருள்சுரந்து ஒப்படைத்து இருப்பதால், எப்பொழுதும் புனித எண்ணத்திலே தோய்ந்து, தோய்ந்து இருவரும் புனித வாழ்க்கை நடத்தினார்கள். இறைவன் அவர்கட்கு அளித்த விசேட அருளின் பயனாய், எண்ணம், சொல், செயல் அனைத்திலும் அவர்களிடம் புனிதத்தன்மையே மேலோங்கி நின்றது அதனால் உடல் உறவு எவனும் எண்ணத்திற்கே அவர்கள் உள்ளத்தில் இடம் இல்லாது போயிற்று.

குடும்பக் காரியங்களை மேரி திறம்பட நிர்வகித்தாள்.

தச்சுத் தொழில் செய்து, சோசப் அன்றாடச் செலவுகளுக்குப் பொருள் ஈட்டினார்.

மற்ற மாதர்களைப் போலவே, மேரியும் குடும்பக் காரியங்களைக் கவனித்தாள். சமையல் செய்தாள்; வீடு பெருக்கினாள்; பாத்திரம் துலக்கினாள்; துணிகளைத் தோய்த்து உலர்த்தினாள். சோசப்பின் மனம் களிப்படையுமாறு பணிவிடை புரிந்தாள்.

இது சமயம், பாலஸ்தீன நாடு ரோமர்களின் ஆதிககத்தின் கீழ் இருந்து வந்தது. அகஸ்டஸ் சீசர் என்னும் ரோமானியச் சக்ரவர்த்தி, அடக்கிக் கட்டுப்படுத்தி ஆண்டு, பாலஸ்தீன மக்களை அதிகாரம் செலுத்தி வந்தார்.

குடிமக்கள் வரி கொடுக்காமல் அரசாங்கத்தை ஏமாற்றி வந்தார்கள். அடிக்கடி இடம்விட்டு இடம் பெயர்ந்து இருந்து கொண்டு, வரி கொடாமல் ஏய்த்தார்கள் இப்படி ஏமாற்றித் திரியும் எத்தர்களைக் கண்டுபிடித்து, ஒரு கட்டுப்பாட்டுக்குக் கொணரச் சக்ரவர்த்தி தீர்மானிததார்.

பொதுவாக நாசரத்து ஊரைச் சேர்ந்த மக்கள் முரட்டுச் சுபாவம் உடையவர்கள்; கட்டுப்பாடாவோ, கண்ணியமாகவோ வாழத் தெரியாதவர்கள்; அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டும் சச்சரவிட்டுக் கொண்டும்

அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒற்றுமையோடு வாழ முயலாமலும் வாழத் தெரியாமலும் இருந்து அவதிப் பட்டார்கள்.

இது சமயம் யூதர்களுக்கு அரசனாய் இருந்தவன் பெயர் ஏரோது. ரோமானியரின் சிற்றரசனாக இருந்த இவன் ரோமானியனுமல்லன்; யூதனுமல்லன். இவன் தாய் அரபு இனத்தைச் சேர்ந்தவள்; தந்தை இந்துமேயா பகுதியைச் சேர்ந்தவன். ரோமானியர்களுக்குக் கையாளயிருந்து, யூதர் களை அடக்கி ஆள்வதில் இவன் உதவிபுரிந்து வந்தான். தற் கால அரசியலில் சந்தர்ப்பவாதிகள் பலர் இருப்பதை நாம் காணலாம்: சந்தர்ப்பவாதிகள் என்போர் எந்தக் கட்சியிலும் நீடித்து இருக்க மாட்டார்கள். நாட்டை ஆளும் கட்சி எதுவோ அதோடு ஒட்டிக்கொண்டு வாழ்க்கை நடத்து வார்கள்; சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், தம் காரியங்களைச் சாதித்துக்கொள்வார்கள்.

இத்தகைய சுயவர்கள் எந்தக்காலத்திலும்இருப்பார்கள், எந்த நாட்டிலும் இருப்பார்கள் என்பதற்கு ஏரோது என்பவன் தக்க ஒரு உதாரணம்.

சந்தர்ப்பவாதியான ஏரோது சரியாகத் தன் கட்டளையை நிறைவேற்றுவானா என்று சக்ரவர்த்தி அகஸ்டஸ் சீசர் சந்தேகப்பட்டார். ஆகவே, சிரியா நாட்டுக் கவர்னர் சிரினூஸ் என்பவனைக் குடிமதிப்புக் கணக்கு எடுக்கும் உத்தரவைத் திறம்படச் செயல்படுத்தும்படி கட்டளையிட்டார்.

சிரினூஸ் என்னும் இந்த ரோமானியன் மகா பொல் லாதவன்;கண்டிப்போடு காரியங்களைக் கவனிப்பவன்;ஆகவே சக்ரவர்த்தியின் அறிக்கையை நாசரத்து ஊர் மக்கள் அறியும் படி அவன் பிரகடனப்படுத்தினான்.

''இன்னும் சில நாட்களில் குடிமதிப்புக்கணக்கு எடுக்கப் படும். தம் முன்னோரின் சொந்த ஊருக்குச் சென்று ஒவ்வொருவரும் தத்தம் பெயரை அங்கு பதிவு செய்து கொள்ள வேண்டும்'' என்று அறிவித்தான்.

இந்த் அறிவிப்பைக் கேட்டதும் நாசரத்தில் வாழ்ந்த

மக்களில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலையில் இருந்த வர்கள் கலக்கமடைந்தார்கள்; நாலைந்து நாட்கள் பிரயாயணம் செய்து, தங்கள் சொந்த ஊருக்குப் போக வேண்டியவர்களும் இருந்தார்கள். மனைவி மக்களை அழைத்துக்கொண்டு எவ்வாறு நெடுந் தூரம் பிரயாணம் செய்வது என்ற சிந்தனையில் ஆழ்ந்தார்கள்.

சோசப் பெரிதும் கலக்கம் அடைந்தார். அவருடைய முன்னோரின் சொந்த ஊர் பெத்தலேகம் என்பது. நாசரத்திலிருந்து சுமார் எண்பது மைல் தொலைவில் அந்த ஊர் இருந்தது. நாலைந்து நாட்கள் தொடர்ந்து பிரயாணம் செய்தால்தான் அந்த ஊரை அடையலாம். ஆகவே, தாமதியாது உடனே புறப்பட்டாக வேண்டும். என் செய்வது?

''மேரி பூரண கருப்பவதியாய் இருக்கிறாள். பிரசவம் எந்த நேரத்திலும் ஏற்படலாம். அவளை எப்படி இவ்வளவு தூரமும் அழைத்துச் செல்வது? தனியே விட்டுச் செல்வதும் சாத்தியப்படாதே? பெத்தலேகம் போவது என்றால், நாலைந்து நாட்கள் பிடிக்குமே?'' என்ற சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

அப்போது மேரி அவரிடம், ''அன்பரே! தாங்கள் கலக்கமடைய வேண்டாம். இறைவன் நம்மோடிருக்கிறார். ஆகையால் நாம் பெத்தலேகம் கிளம்பலாம். எந்த இடையூறும் நேராது'' என்று தைரியம் சொன்னாள்.



ஆகவே, மறு தினம் காலையில் அவர்கள் நாசரத்திலிருந்து தெற்கில் இருக்கும்பெத்தலேகமுக்குப் புறப்பட்டார்கள்.

மேரி கழுதை மீது அமர்ந்து பிரயாணம் செய்தாள். கழுதையின் தும்பைக் கையில் பிடித்துக்கொண்டு, சோசப் பக்கத்தில் நடந்து சென்றார்.

தத்தம் மூதாதையரின் சொந்த ஊருக்கு புறப்பட வேண்டியவர்களும் அன்று நாசரத்திலிருந்து கிளம்பினார்கள்.

தெய்வீகக் குழந்தை

மேரியும் சோசப்பும் நாசரத்தை விட்டுப் பெத்த லேகமை நோக்கிப் புறப்பட்டதைப் போலவே, தாவீது குலத்தில் பிறந்த மற்றவர்களும் தாங்கள் இப்பொழுது வசிக்கும் ஊரைவிட்டுப் பெத்தலேகமை நோக்கிப் புறப் பட்டார்கள்.

அதனால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் பாட்டையில், மக்கள் சாரி சாரியாகச் சென்றுகொண்டிருந் தார்கள். பிரயாணம செய்வோரில் ஆடவரும் இருந்தார்கள்; பெண்டிரும் இருந்தார்கள்; முதியவாகளும இருந்தார்கள்; குழந்தைகளும் இருந்தார்கள்.

சிலர் ஒட்டகங்களில் பிரயாணம் செய்தனர்; சிலர் கோவேறு கழுதைமீது பிரயாணம் செய்தனர்; சிலர் குதிரை களில் பிரயாணம் செய்தார்கள்; சிலர் நடந்து பிரயாணம் செய்தார்கள்.

இதனால் எங்கு பார்த்தாலும ஜனங்களின் நடமாட்டம் மிகுதியாக இருந்தது. சக்ரவர்த்தியின் கட்டளைப்படி, தத்தம் பெயரை பதிவு செய்துகொள்ள ஒவ்வொருவரும் சொந்த ஊரை நோக்கிப் போய்க்கொண் டிருந்தார்கள்.

நாசரத்திலிருந்து புறப்பட்ட மேரியும சோசப்பும் மூன்று நாட்கள் தொடர்ந்து பிரயாணம் செய்து, பெத்தலேகமை அடைந்தார்கள்.

பெத்தலேகம் என்பது நடுத்தரமான ஒரு சிறு கிராமம், அங்கே விடுதிகளும் சததிரங்களும் குறைவு; ஆகையால் தங்குவதற்கு இடம் கிடைக்காமல் பிரயாணிகள் பலர் பெரிதும் அவதிப்பட்டார்கள்.

வீடுகள் அனைத்திலும் முன்பு புறப்பட்டு வந்த பிரயாணிகள் இடம் பிடித்துக்கொண்டார்கள். அதனால் மேரிக்கும் சோசப்புக்கும் தங்க வீடு கிடைக்கவில்லை; ஆகவே, சத்திரத்தில் தங்கலாம் என்ற எண்ணத்துடன், தாவீது காலத்துக்கு முன்னர் கட்டப்பட்ட கிம்காம் என்னும்

ஒரு பழைய சத்திரத்துக்கு மேரியைச் சோசப் அழைத்துப் போனார். அங்கேயும் கூட்டம் மிகுதியாக இருந்தது. இடம் கிடைக்கவில்லை.

மேரிக்குப் பேறு சமயம் நெருங்கிக்கொண்டிருந்தது. என்ன செய்வது என இருவரும் திகைத்தார்கள். வேறு எங்காவது இடம் பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் சத்திரத்துக்குப் பின்புறம் போனார்கள்.

அங்கே ஒரு குன்றின் சரிவில் சிறு சிறு குகைகள் இருந்தன. வழிப்போக்கர்கள் தங்கும் பொருட்டு இந்தக் குகைகள் பயன்பட்டு வந்தன. இடையர்களும் தங்கள் கால் நடைகளுடன் சென்று இந்தக் குகைகளில் ஓய்வு எடுத்துக் கொள்வது உண்டு.

இத்தகைய குகைத் தொழுவம் ஒன்று காலியாய் இருந்தது; அதற்குள் தங்கி இரவுப் பொழுதைக் கழிக்கலாம் என்று மேரியும் சோசப்பும் முடிவு செய்தார்கள்.

ஆகவே, சோசப் உள்ளே சென்று இடத்தைத் துப்புரவு செய்தார். அங்கும் இங்கும் சிதறிக் கிடக்கும் வைக்கோலை அள்ளி, பக்கத்தில் இருக்கும் தொழுவத்தில் போட்டார்.

மேரியும் உள்ளே சென்று ஒரு இடத்தில் அமர்ந்தாள். சிறிது நேரத்திற்கு எல்லாம் யாருடைய உதவியும் இன்றி, தெய்வீகக் களை சொட்டும் ஆண் குழந்தை ஒன்றை அந்தக் குகைத் தொழுவத்தில் மேரி பெற்றாள்.

அப்போது நள்ளிரவு நேரம். நேரம் மட்டும் ஆதாரபூர்வமாகத் தெரிகிறதே யல்லாமல், அவர் பிறந்த தேதியும் கிழமையும் மாதமும் திட்டமாகத் தெரியவில்லை. ஆனால் பின்னர் வந்தவர்கள், இயேசுநாதர் பிறந்த ஆண்டை மட்டும் ஆராய்ந்து திட்டமாக வரையறை செய்து இருக்கிறார்கள். இப்போது நடக்கும் கிறிஸ்து சகாப்த ஆண்டுகளுடன், நான்கு ஆண்டுகளைக் கூட்டினால் இயேசுநாதர் பிறந்த ஆண்டு தெரியவரும்.

நேரத்தைப்பற்றிய குறிப்பு மட்டும் காஸ்பெலில் இருக்கிறது. ஆனால் வருடம், மாதம், தேதி, கிழமை முதலிய பற்றிய குறிப்புக்கள் ஆதாரபூர்வமாகக் காஸ்பெலில் இல்லை.

அதனால்தான் தேதி, கிழமை, மாதம் முதலியவற்றைத் திட்டமாகக் குறிப்பிட முடியவில்லை. ஆறும் நூற்றாண்டில் டியோனிசியுஸ் என்னும் துறவி கிறிஸ்து பிறந்த ஆண்டைக் கணக்கிட்டுப் பார்த்தார். ரோமைய சகாப்தம் 754 என்று கணக்கிட்டார் அவர். ஆனால் இதில் அவர் கணக்கிட்ட சகாப்தக் கணக்குப்படி நான்கு ஆண்டு குறைந்திருப்ப தாகத் தெரியவருகிறது. ஆகையால், இப்பொழுது நடக்கும் கிறிஸ்து சகாப்த ஆண்டுகளுடன் நான்கு ஆண்டுகளைக் கூட்டினால், இயேசுநாதர் பிறந்த சரியான ஆண்டு தெரிய வரும்.

குழந்தை பிறந்ததும், அதை எடுத்துத் துணியில், போர்த்திச் சுற்றி, வைக்கோல் பரப்பி இருக்கும் தொழுவத்தினுள் படுக்க வைத்தாள் மேரி.



தெய்வீகக் குழந்தை ஒன்று பிறப்பதற்குப் பெரிய அரண்மனை தேவையில்லை. தாதியர்களும் செவிலியர்களும தேவையில்லை; பெருதத ஆரவாரமும் ஆடம்பரமும் தேவையில்லை என பதை, கிறிஸ்து பெருமானின் பிறப்பிலிருநது நாம் தெரிந்துகொள்கிறோம்.

எளிய குகையில், மாட்டுத் தொழுவத்தில பிறந்த இந்தக குழந்தைதான், 'மாபெரும சக்ரவர்த்திகளும், அறிஞர்களும், அரசியல்வாதிகளும் பெற முடியாத பெரும் சிறப்பினையும் பெருமையையும் பெற்று, இயேசு பெருமான் என்ற பெயருடன் விளங்கிற்று என்பதை, பின்னர் நாம் படிக்கப் போகிறோம்.

கருத்தரித்துக் குழந்தை பிறக்கப் போகிறது என்பதை அறிவிக்க வந்த வான தூதர் மேரியிடம், "அம்மையே! உமது வயிற்றில் பிறக்க விருக்கும் குழந்தை பெரிய அரசராக விளங்குவார். அவருடைய ராச்சியத்துக்கு ஒரு முடிவே இராது" என்று கூறினர்.

அந்த வான தூதரின் கூற்று அப்படியே முழுக்க முழுக்க நடந்திருப்பதை நாம் சரித்திர மூலம் படிக்கிறோம்.

உலகத்தையே நடுங்கச் செய்த மன்னாதி மன்னர்கள் எல்லாரும் மாண்டு, மடிந்து, மண்ணில் புதைந்து, மறைந்து போனார்கள்; அவர்கள் ஆடம்பரமாகக் கட்டி வாழ்ந்த அரண்மனைகளைக் காணோம்; அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்த அதிகாரிகளைக் காணோம்; ஆட்சியையும் அதிகார மிடுக்கையும் காணோம். அனைத்தும் கால வெள்ளத்தால் மறைந்துபோயின; மக்களும் அவர்களை மறந்துவிட்டார்கள்.

ஆனல், கிறிஸ்து பெருமான் தொடங்கிய அரசு இன்றும் அழிவில்லாமல் ஆட்சி செலுத்தி வருகிறது. நாள்தோறும் கோடிக்கணக்கான மக்கள் கிறிஸ்து பெருமானின் திருவுருவத்தை நினைந்து நினைந்து உருகி, அவரிடம் ஆறுதல் பெறச் செல்கிறார்கள்.

இத்தகைய மகிமையும் 'பெருமையும் வேறு எந்தச் சக்ரவர்த்திக்கும் கிட்டியது இல்லை. இந்த உண்மையை நெப்போலியன் என்னும் பிரஞ்சு நாட்டுச் சக்ரவர்த்தி மனமுவந்து ஒப்புக்கொண்டிருக்கிறார். அடியில் வரும் நெப்போலியன் வாய்மொழி அதை நமக்கு அறிவிக்கிறது:

"அலெக்சாந்தர், சீசர் போன்ற அரசர்களும், நானும் கூட, பெரிய பெரிய வல்லரசுகளை நிறுவினோம். படை பலத்தைக் கொண்டு, அரசை நிர்மாணித்து ஆட்சி செலுத்தினோம். ஆனல், கிறிஸ்து நிறுவியுள்ள அரசு அன்பின் பலத்தைக் கொண்டு நிர்மாணிக்கப் பெற்ற அரசு. அந்த அரசுக்காக, கோடான கோடி மக்கள் இன்றைக்கும், தங்கள் உயிரை விடவும் சித்தமாய் இருக்கிறார்கள்......காலத்தையும் இடத்தையும் கடந்து, கிறிஸ்து பெருமான் நிறுவிய ஆட்சி இயங்கி வருகிறது."

அதிகாரத்தினால் ஏற்படும் ஆட்சியைக் காட்டிலும் அன்பினால் ஏற்படும் ஆட்சிக்கு ஆற்றலும் தகுதியும் மிகுதி உண்டு என்பதை நாம் இயேசு பெருமான் வாழ்க்கையிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

ஊருக்கு ஒதுப்புறத்தில் இருக்கும் மாட்டுத் தொழுவத்தில் ஒருவருக்கும் தெரியாமல் பிறந்திருக்கும் இந்தத் தெய்வீகக் குழந்தையைப் பற்றி, பிறருக்கு அறிவிக்க, இறைவன் திருவுளம் கொண்டார்.

பெத்தலேகம் என்னும் ஊருக்கு ஒரு கல் தொலைவில் நாடோடி இடையர்கள் சிலர், தங்கள் எஜமானர்களுக்குச் சொந்தமான ஆட்டு மந்தைகளைச் சாமக் காவல் காத்து விழித்திருந்தார்கள்.

அப்போது பேரொளி வீசும் வான தூதர் ஒருவர், தங்கள் முன்னே திடீரென வந்து நிற்பதைக் கண்டு, அந்த இடையர்கள் பயந்து போனார்கள்.



வான தூதர் அவர்களுக்கு ஆறுதல் சொன்னார்: "அன்பர்களே! பயப்பட வேண்டாம். நீங்களும் உங்களைப் போன்றவர்களும் விமோசனம் அடையும் பொருட்டு, இரட்சகர் ஒருவர் இன்று பிறந்திருக்கிறார். ஏழை எளியவர்களையும் பாவிகளையும் இரட்சிக்கும் பொருட்டு, அவர் அவதரித்து இருக்கிறார். தெய்வீகத் தன்மை வாய்ந்த அந்தக் குழந்தையை அவருடைய அன்னை துணியால் போர்த்தி, மாட்டுத் தொழுவத்தில் படுக்க வைத்திருக்

கிறார். இதை ஒரு அடையாளமாகக் கொண்டு, உங்கள் இரட்சகரை நீங்கள் தரிசியுங்கள்'' என்று சொன்னார்.

இதைக் கேட்டதும், பயம் நீங்கி, இடையர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். தாமதியாது புறப்பட்டுச் சென்று, தங்களை மீட்கும் பொருட்டுப் பிறந்திருக்கும் தெய்வீகக் குழந்தையைத் தரிசித்தார்கள்.

புனிதர் சிமியோன்

தெய்வீகக் குழந்தையை இடையர்கள் வந்து தரிசித்துப் போன பின்பு, மேரியும் சோசப்பும் குகைத் தொழுவத்தில் நாலைந்து நாட்கள் தங்கினார்கள். இதற்கிடையில் குடி மதிப்புக் கணக்குப் பதிவு செய்துகொள்ள வந்தவர்களில் பலர் பதிவு செய்துகொண்டு சொந்த ஊர் திரும்பி விட்டார்கள்.

அதனால் மேரிக்கும் சோசப்புக்கும் ஊருக்குள் சென்று தங்குவதற்கு வீடு கிடைத்தது. ஆகையால் மேரியும் சோசப்பும் குகைத் தொழுவத்தைவிட்டுப் பெத்தலேக மிலுள்ள ஒரு வீட்டுக்கு வந்து தங்கினார்கள்.

யூதக் குடும்பங்களில் ஆண் குழந்தை பிறந்தால், பிறந்த எட்டாவது நாளன்று, அந்தக் குழந்தைக்கு விருத்த சேதனம் செய்வார்கள்; பிறகு பெயர் வைப்பார்கள்.

இந்த இரு சடங்குகளுக்கும் குருமார்களோ வேறு யாருமோ வர வேண்டும் என்பது இல்லை. வீட்டிலுள்ளவர் களே இந்த இரு சடங்குகளையும், முடித்துக்கொள்வார்கள்.

இந்த முறையை அனுசரித்து, மேரிக்குப் பிறந்த தெய்வீகக் குழந்தைக்கும் எட்டாவது நாளன்று விருத்த சேதனம் செய்தார்கள்; அதன் பின், ''இயேசு'' என்று குழந்தைக்குப் பெயர் வைத்தார்கள்.

''இயேசு'' என்னும் சொல், மக்களைப் பாவக்கட்டு களினின்றும் மீட்பவர் என்று பொருள் தரும்.

ஆண் குழந்தையைப் பெற்றால், குழந்தையைப் பெற்ற

தாய்க்கு நாற்பது நாட்கள்வரை தீட்டு உண்டு என்றும் பெண் குழந்தையைப் பெற்றால், எண்பது நாட்கள்வரை தீட்டு உண்டு என்றும், யூதர்கள் நம்பினார்கள். குறிப்பிட்ட தீட்டுக் காலம் முடியும்வரை, குழந்தையை ஈன்ற தாய், புனிதமான எந்தப் பொருளையும் தொடக் கூடாது. கோயிலின் கருவறைக்குள் நுழையக் கூடாது என்பது யூதர்களின் நடைமுறைச் சம்பிரதாய மாகும்.

நாற்பது நாட்கள் கழிந்து தீட்டு நீங்கியதும், யூதர்களின் சம்பிரதாயப்படி குழந்தை இயேசுவைத் தூக்கிக் கொண்டும், கோயிலுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கைப் பொருளை எடுத்துக்கொண்டும், மேரியும் சோசப்பும் பெத்தலேகமிலிருந்து, ஆறு கல் தொலைவிலுள்ள ஜெருசலம் நகருக்குப் போனார்கள்.

தலைச்சன் குழந்தை ஆண் குழந்தையாய் இருந்தால், அந்தக் குழந்தையை ஆலயத்துக்கு அர்ப்பணித்துவிட வேண்டும் என்று யூதர்களின் சட்டம் கூறிற்று. அப்படி அர்ப்பணிக்கும் குழந்தையை, ஐந்து ஷேக்கில்*கோவிலுக்குக் காணிக்கை செலுத்திவிட்டுத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்ற வழக்கமும் இருந்தது.

இந்தப் வழக்கப்படி குழந்தையைக் கோயிலுக்கு அர்ப்பணித்து, பிறகு காணிக்கை செலுத்திக் குழந்தையைத் திரும்பப் பெற்றுக்கொள்ளவும், தீட்டு நாட்கள் கழிந்த பின், தன்னைப் புனிதப்படுத்திக்கொள்ளவும், மேரியும் சோசப்பும் ஜெருசலத்துக்குப் போனார்கள்.

தாய்மார்கள் இப்படி தேவாலயத்துக்கு வரும்பொழுது, பணக்காரர்களாய் இருப்பின், சிறு ஆட்டுக்குட்டி ஒன்றைக் கொண்டுவந்து தகன பலி கொடுப்பார்கள். ஏழைகளாய் இருந்தால், இரண்டு மாடப் புறாக்களைக் கொண்டுவந்து தகன பலி கொடுப்பார்கள்.

சோசப்பும் மேரியும் ஏழைகளாய் இருந்ததால், இரண்டு மாடப்புறாக்களை மட்டும் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

அவர்கள் மூவரும் காணிக்கைகளுடன் தேவாலயத்தை

---

*ஷேக்கில்: யூதர் நாணயம்.

அணுகிய சமயம், வயது முதிர்ந்த புனிதர் ஒருவர் அங்கு வந்தார். அவர் பெயர் சிமியோன். அவர் பக்திமான். நேர்மையும் தெய்வ பக்தியும் மிகுந்தவர். இஸ்ராயேலைச் சேர்ந்த மக்கள் ஆன்மீகத் துறையிலும், அரசியல் துறையிலும், நலிந்து மெலிந்து வாழ்ந்து வருவதைக் கண்டு, வருந்துபவர். எப்பொழுது அவர்களுக்கு விமோசனம் கிட்டுமோ, வர வேண்டிய மீட்பர் என்று வந்து அவர்களுக்கு ஏற்றத்தையும் பெருமையையும் கொடுத்து உய்விப்பாரோ என்று ஏங்கி ஏங்கி வாழ்ந்து வருபவர்.

இந்தப் புனிதர் சிமியோனுடைய உள்ளக்கிடையை அறிந்த இறைவன், புனித ஆவி மூலம் அவருக்கு ஆறுதல் ஏற்படச் செய்தார். "மக்களை மீட்கும் பொருட்டு, கர்த்தர் ஒருவர் இயேசு கிறிஸ்து என்னும் பெயரில் தோன்றுவார். அவரைத் தரிசித்த பின்னரே, நீர் அந்திம தசையை அடைவீர்" என்று புனித ஆவி மூலம் அறிவிக்கச் செய்தார்.

"மீட்பர் எப்பொழுது தோன்றுவார்! மீட்பர் எப்பொழுது தோன்றுவார்!" என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த சிமியோன், மேற்கூறிய குழந்தையுடன் பெற்றோர் ஆலயத்துக்கு வருவதைக் கண்டதும், மகிழ்ச்சியுடன் துள்ளி எழுந்தார். 'இவர்தான் மீட்பர்' என்று அவரது உள்ளத்தில் ஒரு குரல் ஒலித்தது. பெற்றோர் அருகே சென்று குழந்தையை அன்போடு தம் கைகளில் வாங்கிக்கொண்டார். மீட்பரைக் காணும் பேறு தமக்குக் கிடைத்தமைக்காக இறைவனை வாழ்த்தினார்:

> இறைவனே! உமது வார்த்தைப்படி உம் ஊழியனை அமைதியுடன் செல்ல இப்பொழுது அனுமதியும்!
>
> மக்கள் அனைவரையும் மீட்கும் பொருட்டு, இந்த உலகில் தாங்கள் செய்திருக்கும் ஏற்பாட்டை எனது கண்களாலே நேரில் காணும் பாக்கியம் பெற்றேன்.
>
> நீர் மற்ற இனத்தவருக்கு எளிமையாகவும் இஸ்ராயேல் நாட்டவருக்கு மகிமையாகவும் விளங்குகிறீர்.

லூக்கா: 2, 27-32.

பிறகு அவர் குழந்தையின் தாய் மேரியைப் பார்த்து, "இஸ்ராயேல் நாட்டில் பலர் இந்தக் குழந்தையால்

மேன்மை அடைவர்; பலர் அழிவு அடைவர். விரோத மான பேச்சுகளுக்கு எல்லாம் இந்தக் குழந்தை ஒரு இலக் காகத் திகழும். வாள் இதயத்தில் பாய்ந்தால் வருந்துவதை ஒப்ப, இந்தக் குழந்தையால், நீர் துயருற்று வருந்துவீர்'' என்று சொன்னார்.



அதே நேரத்தில், அதே இடத்தில், புனிதம் நிறைந்த மூதாட்டி ஒருத்தி தோன்றினாள்.

இந்த மூதாட்டியின் பெயர் அன்னா. திருமணம் முடிந்து ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர், இந்தப் பெண் விதவை ஆனாள். பின்னர், அவள் ஆலயத்துக்கு வந்து தங்கி, நோன்பு இருந்து, ஜபமும் வழிபாடும் செய்துகொண்டு, காலத்தையும் பொழு தையும் கழித்து வருகிறாள். அவளுக்கு வயது இப்பொழுது எண்பத்து நான்கு நடந்துகொண்டிருக்கிறது.

அருகே வந்ததும், மேரி கையில் இருக்கும் குழந்தையை, மூதாட்டி அன்னா பார்த்தாள். உடனே உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க இறைவனை அவள் வாழ்த்தினாள்.

இதன் பின்னர் மேரியும் சோசப்பும் ஆலயத்துக்குள் சென்று, செய்து முடிக்க வேண்டிய சடங்குகளைச் செய்து விட்டு, குழந்தை இயேசுவை எடுத்துக்கொண்டு பெத்தலேகம் திரும்பினார்கள்.

அறிஞரின் வருகை

ஜெருசலம் கோயிலில் சடங்குகளை முடித்துக்கொண்டு, மேரியும் சோசப்பும் குழந்தை இயேசுவை அழைத்துக் கொண்டு, பெத்தலேகம் என்னும் கிராமத்துக்குத் திரும்பினர். நாசரத்துக்குத் திரும்பாமல் பெத்தலேகம் கிராமத்தில் அவர்கள் ஏன் தங்கினார்கள் என்பதற்குக் காரணம் ஒன்றும் தெரியவில்லை.

பெத்தலேகம் கிராமத்தில் திருக் குடும்பதார் சில மாதங்கள் மட்டும் தங்கி இருந்ததாகச் சிலர் எழுதி இருக்கின்றனர். வேறு சிலர் இரண்டு ஆண்டுகள்வரை பெத்தலேகம் கிராமத்தில் இருந்தனர் என்று குறிப்பிட்டு இருக்கின்றனர்.

திருக்குடும்பம் இவ்வாறு பெத்தலேகமில் தங்கி இருந்த சமயம் கிழக்கேயிருந்து மூன்று அறிஞர்கள் புறப்பட்டு வந்தார்கள். அவர்கள் ஜெருசலம் நகருக்கு வந்து, ''யூதர்களுக்கு அரசராய்ப் பிறந்திருப்பவர் எங்கே இருக்கிறார்? அவருடைய விண்மீனை நாங்கள் கீழ்த் திசையில் கண்டோம். ஆகவே, தரிசித்து அவருக்கு மரியாதை செய்யும் பொருட்டு நாங்கள் வந்து இருக்கிறோம்'' என்று சொல்லி, நகரவாசி ஒருவரிடம் கேட்டார்கள்.

மாகோய் என்னும் இந்த அறிஞர்கள் இவ்வாறு கேட்டதும் அந்த நகரவாசி பிரமித்துப் போனார். ''ஏரோது மன்னனைத் தவிர்த்து, வேறு அரசர் யாரும் இங்கு இல்லையே!'' என்று வியப்புடன் அவர் பதில் சொன்னார்.

---

* இயேசு, மேரி, சோசப் ஆகிய மூவரையும் குறிப்பிட நேரும்பொழுது திருக் குடும்பம் என அழைப்பது கிறிஸ்தவ சமய மரபு.

ஆகவே, வந்த அறிஞர்கள் மூவரும் வழி நெடுகிலும் விசாரித்துக்கொண்டே போனார்கள்.

இந்தச் செய்தி காட்டுத் தீ போல் வெகு விரைவில் எங்கும் பரவிவிட்டது. நகர மக்கள் பெரிதும் பரபரப்பு அடைந்தனர்.

அரசன் ஏரோதுவுக்கும் இந்தச் செய்தி எட்டிற்று முதிய வனும் கொடியவனுமான இந்த அரசன் முதலில் அதிர்ச்சி அடைந்துபோனான். தனக்கு எதிராக அரசன் ஒருவன் பிறந் திருக்கிறான் என்று கேள்விப்பட்டதும் தனது சிம்மாசனம் பறிபோய்விடக் கூடும் என்று அவன் அஞ்சினான்.

உடனே குருமார்களையும் பண்டிதர்களையும் தன்பால் தருவித்து, ''பிறக்க இருக்கும் மெசியா—மீட்பர் எந்த ஊரில், எந்த நாட்டில் பிறப்பார் என்று கூறப்பட்டு இருக் கிறது, சொல்லுங்கள்'' என்று விசாரித்தான்.

''யூதேயா நாட்டில், பெத்தலேகம் என்னும் சிற்றூரில் பிறப்பார் என்று நூல்கள் கூறுகின்றன'' என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

நூல்கள் கூறும் விவரத்தைத்தெரிந்துகொண்ட பின்னர், ஏரோது மன்னன், புது அரசனைத் தரிசிக்க வந்திருக்கும் மூன்று அறிஞர்களையும் தன்பால் அழைத்து வரச் செய்தான்.

வந்ததும் அவர்களிடம், ''அறிஞர்களே! நீங்கள் தேடி வந்திருக்கும் புது அரசன் பெத்தலேகம் என்னும் சிறு கிராமத்தில் பிறந்திருக்கக் கூடும் என்று தெரியவருகிறது; நீங்கள் சென்று அவரைத் தரிசித்துத் திரும்புங்கள்; அவர் எந்த இடத்தில் பிறந்திருக்கிறார் என்பதை எனக்கும் தெரிவியுங்கள். நானும் சென்று அவரைத் தரிசிக்க ஆசைப் படுகிறேன்'' என்று சொன்னான்.

இதுவரை அறிஞர்கள் மூவருக்கும் வழி காட்டிவந்த விண்மீன், அரசர் ஏரோதிடம் வந்ததும் மறைந்து போயிற்று.

பெத்தலேகம் என்னும் சிற்றூரில்தான் புதிய அரசர் பிறந்திருக்கிறார் என்னும் விவரத்தை அரசன் ஏரோது மூலம் தெரிந்துகொண்டு, அரண்மனையை விட்டு அறிஞர்கள்

மூவரும் புறப்பட்டபோது விண்மீன் மீண்டும் தோன்றி அவர்களுக்கு வழிகாட்டத் தொடங்கிற்று.



விண்மீன் காட்டின வழியில் மூன்று அறிஞர்களும் சென்றார்கள். அந்த விண்மீன் இயேசுநாதர் வசிக்கும் இல்லத்துக்கு வந்ததும் அங்கேயே நின்றுவிட்டது.

யூதர்களுக்கு அரசராய்ப் பிறந்திருப்பவர் இந்த இல்லத்தில் இருப்பதாக அதனால் தெரிந்துகொண்டு, அறிஞர்கள் மூவரும் உள்ளே சென்று, தெய்வீகக் குழந்தை இயேசுவைத் தரிசித்தார்கள். தங்கத்தையும் சாம்பிராணியையும் மீறை என்னும் ஒருவித மூலிகையையும் காணிக்கையாகச் சமர்ப்பித்து, அந்தத் தெய்வீகக் குழந்தையை அறிஞர்கள் மூவரும் வணங்கினார்கள்.



கிழக்கிலிருந்து இயேசுவை வணங்க வந்த அறிஞர்கள் பன்னிருவர் என்று சிலர் கூறுகின்றனர். சிலர் ஒன்பது பேர் என்று கூறுகின்றனர். மற்றும் சிலர்

காணிக்கைப் பொருள்கள் எணிக்கையில் மூன்றுகஇருப்பதால் வந்த அறிஞர்கள் மூவர்தான் என்று கூறியிருக்கின்றனர்.

ஒட்டகங்களில் வந்த இந்த அறிஞர்கள் மூவரும் தெய்வீகக் குழந்தை இயேசுவைத் தரிசித்தது குறித்து, கிறிஸ்துவ மதத் திருச் சபையினர் ஆண்டுதோறும் ஒரு விழாக்கொண்டாடுகின்றனர்; அந்த விழாவுக்கு 'எப்பிபனி—மூவசரர் விழா' என்று பெயர்.

இந்த விழாவைக் கிறிஸ்மஸ் விழாவுக்குப் பின்னர், கொண்டாடுகின்றனர். இந்த விழாவை, சிறிய கிறிஸ்மஸ் என்று அழைப்பது உண்டு.

அறிஞர்கள் ஒரு இரவு மட்டும் பெத்தலேகமில் தங்கினர். அப்போது இறைவன் கனவில் தோன்றி மன்னன் ஏரோதிடம் அவர்கள் திரும்பப் போக வேண்டாம் என்றும், வேறு வழியாக, அவர்களின் சொந்த நாட்டுக்கு அவர்கள் திரும்பிவிடுவதே நலம் என்றும் அறிவித்தார்.

அதன்படி அறிஞர்கள் மூவரும் வேறு வழியாகத் தம் நாட்டுக்குத் திரும்பினர்.

படுகொலே

அறிஞர்களே எதிர்பார்த்து, எதிர்பார்த்து, ஏரோது மன்னன் ஆவலுடன் காத்திருந்தான். பல நாட்கள் ஆகியும் தன்பால் அவர்கள் திரும்பா திருப்பதைக் கண்டு அவன் ஆத்திரம் அடைந்தான். தன்னிடம் கூறிச் சென்றபடி தன்பால் அவர்கள் ஏன் திரும்பவில்லே என்பது பற்றி யோசித்தான். ஏதோ சூது நடந்திருப்பதாக முடிவுக்கு வந்தான்.

அறிஞர்கள் கூறியபடி யூதர்களுக்கு அரசன் பிறந்திருப்பது உண்மையாளுல், தமது சிம்மாதனத்துக்கு ஆபத்து நேரலாம் என்று ஏரோது பயந்தான். ஆகவே, அந்த ஆபத்தைத் தடுப்பதற்கான முயற்சியில் அவன் கவனம் செலுத்திஞன்.

விண்மீன் தோன்றி ஏறக்குறைய இரண்டு வருடங்கள்

இருக்கக் கூடும் என்று அறிஞர்கள் கூறியதிலிருந்து யூகித்துக் கொண்டான். ஆகவே, அவர்கள் குறிப்பிடும் குழந்தை பிறந்து இரண்டு வருடங்கள் ஆகலாம் என்ற முடிவுக்கு வந்தான் ஏரோது. எனவே, பெத்தலேகத்தில் இருக்கும் இரண்டு வயது ஆண் குழந்தைகளை எல்லாம் வெட்டிக் கொன்றுவிட்டால், தன்னை எதிர்நோக்கி இருக்கும ஆபத்து அகன்று போகும் என்று நினைத்தான் அந்த அரசன்.

உடனே ஒரு முடிவுக்கு வந்து, பெத்தலேகத்திலும், அதன் சுற்று வட்டாரத்திலும் இருக்கும் இரண்டு வயது நிரம்பிய ஆண் குழந்தைகளை எல்லாம் வெட்டிக் கொல்லும்படி உத்தர விட்டான ஏரோது.

அதன்படி அவனுடைய சிப்பந்திகள் பெத்தலேகம் புறப் பட்டுச் சென்று, ஏரோது அரசனின் கட்டளைப்படி இரண்டு வயது நிரம்பிய ஆண் குழந்தைகளை எல்லாம் படுகொலை செய்துவிட்டு, ஜெருசலம் திரும்பி, ஏரோது மன்னனிடம் விவரத்தைத் தெரிவித்தனர்.

சிப்பந்திகள் இப்படிப் படுகொலை செய்த குழந்தைகளின் எண்ணிக்கை, சுமார் இருபது முப்பது இருக்கலாம்.

ஆனால், எந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டும் என்ற விருப்பத்துடன மன்னன் ஏரோது கட்டளை யிட்டானோ, அந்தக் குழந்தை ஒன்று மட்டும் எவ்வித ஆபத்தும் இன்றி, இந்தப் படுகொலையிலிருந்து தப்பித்துக்கொண்டார்.

ஏரோதின் சிப்பந்திகள் பெத்தலேகத்துக்கு வருவதற்கு முன்னே, வான தூதர் ஒருவர் கனவில் தோன்றி, சோசப் பிடம், ''எழுந்து, குழந்தையையும் தாய் மேரியையும் அழைத்துக்கொண்டு எகிப்துக்கு ஓடிவிடும்; நான் மீண்டும் உமக்குத் தெரிவிக்கும்வரை எகிப்து நாட்டிலேயே தங்கி இரும். குழந்தையைக் கொல்வதற்காக, ஏரோது மன்னன் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறான்'' என்று அறிவித்தார்.

அறிவிப்பைச் செவிமடுத்ததும், குழந்தையையும் தாயையும் அழைத்துக்கொண்டு, சோசப் தாமதியாது எகிப்துக்குப் புறப்பட்டார்.

மேரியும் குழந்தையும் ஒரு கோவேறு கழுதை மீது அமர்ந்து கொண்டு பிரயாணம் செய்தார்கள். சோசப் கழுதையின் தும்பைக் கையில் பிடித்துக் கொண்டு, அவர்களை அழைத்துச் சென்றார்.



ஏழு நாட்கள் பிரயாணம் செய்து, மூவரும் எகிப்தை அடைந்தார்கள்; இவர்கள் மூவரும் பிரயாணம் செய்த பொழுது, கொடிய விலங்குகள் பணிவுடன் வந்து, இயேசுவின் பாதங்களை வணங்கி மரியாதை செய்தன என்றும், மரங்கள் தாழ்ந்து பணிந்து பெருமைப்படுத்தின என்றும், கர்ண பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன.

பச்சிளம் குழந்தைகளைக் கொன்று, தனது சிம்மாதனத்தை நிலைநாட்டிக்கொள்ள ஏரோது ஆசைப்பட்டான் அல்லவா? அந்த ஆசை நிறைவேறிற்று? இல்லை; இல்லை. குழந்தைகளை எல்லாம் படுகொலைகள் செய்த சில ஆண்டுகளுக்குப் பின்னர், தனது ஆசை பூர்த்தியாகாமல் ஏரோது மன்னன் இறந்து போனான். புகழ் இன்றி, பெருமை இன்றி, ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காகி, அந்தக் கொலைகாரன் ஏரோது இறந்து போனான்.

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி என்னும் பெற்றியை அறிந்து, உணர்ந்து, வாழ்க்கை நடத்தி இருந்தால், பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தைகளைக் கொல்லும் மனப்பாங்கு ஏரோது மன்னனுக்கு ஏற்பட்டு இருக்குமா?

உலகில் பெரும்பாலான மக்கள் இந்த உண்மையை

உணராமல்தான் வாழ்க்கை நடத்துகின்றனர். அதனால்தான் உலகில், பூசலும் பிணக்கும் போரும் வறுமையும் பகைமையும் மலிந்து இருக்கின்றன.

சில ஆண்டுகள் மேரியும் சோசப்பும் குழந்தை இயேசுவுடன் எகிப்தில் தங்கி இருந்தனர்.

அதன் பின்னர், ஒரு நாள் தேவ தூதன் ஒருவன் கனவில் தோன்றி, சோசப்பிடம் ''ஏரோது மன்னன் இறந்து போனான். ஆகவே, நீங்கள் எகிப்தை விட்டு, உங்கள் சொந்த ஊரான நாசரத்துக்குப் போங்கள்'' என்று அறிவித்தான்.

அதன்படி குழந்தை இயேசுவை அழைத்துக்கொண்டு, மேரியும் சோசப்பும் நாசரத்துக்குத் திரும்பினர்.

குழந்தைப் பருவம்

இயேசு கிறிஸ்து இந்த மண்ணுலகில் முப்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். இந்த முப்பத்து மூன்று ஆண்டுகளையும், இரு தொகுதிகளாக—முன் முப்பது ஆண்டுகளை ஒரு தொகுதியாகவும், இறுதி மூன்று ஆண்டுகளை ஒரு தொகுதியாகவும்—பிரித்திருக்கிறார்கள்.

முன் முப்பது ஆண்டுகளை, மறைவா யிருந்த காலம் என்றும், பின் மூன்று ஆண்டுகளை வெளிப்படுத்திக்கொண்ட காலம் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

மறைவா யிருந்த காலத்தில்—அதாவது முன் முப்பது ஆண்டுகளில்—இயேசுநாதரின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களில் இரண்டொன்றை மட்டும் தவிர்த்து, ஆதாரபூர்வமான வேறு சம்பவம் எதுவும் இல்லை.

இயேசுநாதரின் வாழ்க்கையை ஆதாரபூர்வமாக நாம் தெரிந்துகொள்ள உதவியாய் இருப்பது, புனித பைபிள் நூலில் இருக்கும் புதிய ஏற்பாடு என்னும் பகுதியாகும்.

புதிய ஏற்பாட்டில் முதன் முதலாக இருக்கும் நான்கு பகுதிகளை, இயேசுநாதரின் முக்கிய சீடர்கள் நால்வர் எழுதி இருக்கிறார்கள்.

முதற் பகுதியை மத்தேயு என்பவரும், இரண்டாவது பகுதியை மாற்கு என்பவரும், மூன்றாவது பகுதியை லூக்கா என்பவரும், நான்காவது பகுதியை ஜான் என்பவரும் எழுதி இருக்கிறார்கள்.

இந்த நான்கு பகுதிகளையும் ''காஸ்பெல்'' அதாவது நற்செய்தி நூல்கள்* எனக் கூறுவர். இயேசு பெருமானுடைய வாழ்க்கைக் குறிப்புகளும் போதனைகளும் இந்தச் சுவிசேஷங்களில் இருக்கின்றன.

ஆனால், இயேசுநாதரின் முன் முப்பது வருடங்களைப் பற்றிய குறிப்புக்கள் விவரமாக இந்தப் பகுதிகளிலிருந்து கிடைக்கவில்லை.

இயேசுநாதர் குழந்தைப் பருவத்தில் எப்படி வளர்ந்து வாலிபப் பருவத்தை அடைந்தார்? எந்தப் பள்ளியில் சேர்ந்து அவர் படித்தார்? அவருக்குக்கல்வி கற்பித்த ஆசிரியர் யாவர்? பொதுநலத் தொண்டில் ஈடுபட்டு, போதனை செய்ய அவருக்குத் தூண்டுகோலாய் இருந்தவை எவை?



இந்த விவரங்களைப் பற்றிய குறிப்புகள் எதுவும் சுவிசேஷங்களில் தென்படவில்லை. ஆனால், லூக்கா என்பவர் மட்டும் இரண்டொரு செய்திகளை, இயேசுநாதரின் குழந்தைப் பருவத்தைப்பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்:

* சுவிசேஷம் எனவும் சொல்வது உண்டு.

குழந்தை வளர்ந்து, பெரிதாகி, பலத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கிற்று. இறைவன் அவர்பால் கருணையுடன் இருந்தார்

லூக்கா: 2.40

அறிவிலும் வயதிலும் அவர் அபிவிருத்தி அடைந்து வந்தார். இறைவனுடைய கருணைக்கும் மனிதருடைய அன்புக்கும் அவர் பாத்திரராகி விளங்கினார்

லூக்கா: 2.52

என்று அவர் எழுதியுள்ளார்.

இயேசுநாதர் குழந்தைப் பருவத்திலிருந்தே திருத்தமாகவும் செம்மையாவும் நேர்மையாகவும் சுறுசுறுப்புடனும வாழ்ந்தார். தாய் தந்தையருக்கு உதவி புரிந்தார். அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்து பணிவிடை செய்தார். அண்டை அயலாருடன் அன்போடு கலந்து பழகினார். சோம்பேறியாய் இராமல் ஒரு தொழிலைக் கற்றுக் கொண்டார். தன் வளர்ப்புத் தந்தை சோசப் செய்துவந்த தச்சுத் தொழிலைத் தானும் கற்றுக்கொண்டார்.

யூதர்களின் ஆலயங்களுக்குச் சென்று, வழிபாடு செய்தார். அங்கு வாசிக்கப்படும் வேத வாக்கியங்களைச் செவிமெடுத்து, கருத்தில் வாங்கிக்கொண்டார்.



தமது தெய்வத்தன்மையைப் பிறருக்குக் காட்டாமல மறைத்துக்கொண்டு, மற்ற மனிதர்களைப் போலவே, இயேசுவும் வாழ்க்கை நடத்திய காரணத்தால்இந்தக்காலத்தை —அதாவது முன் முப்பது ஆண்டுகளை— மறைவாயிருநத காலம் என்று குறிப்பிடுகிறார்கள்.

முப்பது ஆண்டுகள் வரை தமது தெய்வீகத்

தன்மையை மறைத்துக்கொண்டு, இயேசுநாதர் வாழ்க்கை நடத்தியபோதிலும், அவர் தெய்வத்தன்மை உள்ளவர் என்பதை அறிந்தவர்கள் சிலர் அப்பொழுதும் இருந்தார்கள்.

இயேசுவின் அன்னை மேரிக்கு, தன் புதல்வன் தெய்வத் தன்மை வாய்ந்தவர் என்பது தெரியும்; வளர்ப்புத் தந்தை சோசப்புக்கும் தெரியும். புனித நீராட்டும் ஜானுக்குத் தெரியும். அவருடைய அன்னை எலிசபெத்துக்குத் தெரியும். இத்தனை பேரும் இயேசு தெய்வத்தன்மை பெற்றவர் என்பதை அறிந்து, அவர்பால் அன்போடும் மரியாதை யோடும் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

கலிலேயாப் பகுதி வளமான பகுதி என்பதையும், பழங்களும் மற்ற உணவுப் பொருள்களும் அங்கு நிறையக் கிடைக்கும் என்பதையும் நாம் அறிவோம். ஆகவே, இயேசுநாதர் தமது குழந்தைப் பருவத்தை, வளம்கொழிக்கும் சூழ்நிலையில் தான் கழித்து இருக்கிறார் என்று கருத இடம் உண்டு.

ஆயினும் இயேசுநாரின் தாயும் வளர்ப்புத் தந்தையும் எளிய நிலையில்தான் வாழ்க்கையை நடத்திவந்திருக்கிறார்கள்.

சோசப் தச்சுத் தொழில் செய்து, குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். குடும்பத்தில் மேரி, சோசப், இயேசுநாதர் மூவரையும் தவிர்த்து, மற்றும் சிலரும் இருந்தார்கள்.

மேரிக்குச் சகோதரி ஒருத்தி இருந்தாள் (ஜான் 19.25) என்றும், அவளுடைய குழந்தைகள் மேரியின் குடும்பத்தில் வாழ்ந்து வந்தனர் என்றும், இவர்களை உடன்பிறந்தவர்களைப்போல, ''சகோதரிகள்'' என்றும் ''சகோதரர்கள்'' என்றும் இயேசுநாதர் உறவுகொண்டாடியதாக, மாற்கு, மத்தேயு முதலியவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

'என் தந்தை வீடு'

இயேசுநாதருக்குப் பன்னிரண்டாம் வயது நடந்து கொண்டிருந்தது. அது சமயம் அவரும் அவருடைய தாய் மேரியும் வளர்ப்புத் தந்தை சோசப்பும் ஜெருசலம் நகருக்குச் சென்றார்கள்.

ஆண்டுதோறும் முக்கியமாக மூன்று விழாக்களை, யூதர்கள் பயபக்தியுடன் விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம். பாஸ்கு, பெந்தகோஸ்து, கூடாரப் பண்டிகை என அந்த விழாக்களை அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்த விழாக்களில் கலந்துகொள்ளும் பொருட்டு, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆடவரும் பெண்டிரும் சிறுவர்களும் திரள் திரளாக ஜெருசலத்துக்கு வருவார்கள்.

பாஸ்கு விழா என்பது யூதர்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிற ஒரு திருநாள்.

இந்த விழா, மார்ச்சு பதினைந்தாம் தேதியிலிருந்து ஏப்ரல் பதினைந்தாம் தேதிக்குள் வரும். எகிப்தில் கஷ்டத்துடன் வசித்துவந்த யூதர்களை, இறைவன் ஒரு நாள் இரவு, எகிப்திலிருந்து வெளியேற்றியபோது, தேவர் தூதர் ஒருவர், எகிப்தியர்கள் செய்த கொடுமைகளின் பொருட்டு அவர்களுடைய தலைச்சன் குழந்தைகளை வாளால் வெட்டிக் கொன்றார். ஆனால், யூதர்களிடம் பரிவுகாட்டி, அவர்களின் தலைச்சன் குழந்தைகளை ஒன்றும் செய்யாது கடந்து சென்றார்.

தங்கள் குழந்தைகளை ஒன்றும் செய்யாது தேவதூதர் கருணைகாட்டிக் கடந்து போனதை நினைந்து, யூதர்கள் ஆண்டுதோறும், பாஸ்கு விழாவை விமரிசையாகக் கொண்டாடுவார்கள். 'பாஸ்கா' என்றால் கடந்துபோதல் என்று பொருள்.

இந்த விழா தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறும். அடிமைத் தளையிலிருந்து தாங்கள் விடுதலை அடைந்ததை நினைந்து நினைந்து, இந்த விழாவை யூதர்கள் ஆனந்தமாகவும் ஆர்வத்துடனும் கொண்டாடுவார்கள். பாலஸ்தீன நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏறக்குறைய முப்பது லட்சம் மக்கள்வரை ஜெருசலத்துக்கு இந்த விழாவின்போது வந்து கூடுவார்கள் என்றும், சுமார் இரண்டரை லட்சம் ஆட்டுக் குட்டிகள்வரை அப்போது பலியிடப்படும் என்றும் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

ஜெருசலம் என்ற பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே

யூதர்களின் உள்ளமும் உடலும் ஒருங்கே பூரித்துப்போகும். பாட்டுக்கள் பாடிக்கொண்டு அளவற்ற உற்சாகத்துடன் ஜெருசலத்தை நோக்கி, அவர்கள் செல்வார்கள். எத்தகைய மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் யூதர்கள் ஜெருசலம் சென்றார்கள் என்பதை அடியில் வரும் பைபிள் பகுதியால் அறியலாம்:

இறைவனுடைய ஆலயத்துக்கு வாருங்கள் என்று என்னை அவர்கள் அழைத்தபோது நான் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன்.

ஏ ஜெருசலமே! எனது பாதங்கள் உனது எல்லைக்குள் வந்து நிற்கட்டும்.

சகல பொருத்தங்களும் இணைந்த தன்மையில் ஜெருசல நகரம் கட்டப்பட்டு இருக்கிறது.

இறைவனுடைய கோத்திரத்தார்கள், இறைவனைத் துதிக்கும் பொருட்டு, அங்கே போகிறார்கள். இஸ்ராயேலின் பெருமை புலப்படும் பொருட்டு அங்கே போகிறார்கள்.

அந்த நகரம் நீதியின் உறைவிடம; தாவீதின் வம்சத்தவர்களின் அரியாசனம் இருக்கும் இடம்.

ஜெருசல நகரம் சமாதானத்தின் உறைவிடமாகத் திகழட்டும் என்று நாம் பிரார்த்திப்போமாக! ஜெருசலத்தை நேசிப்பவர்கள் சகல நலன்களையும் அடையட்டும்.

ஜெருசலமே! உன்பால் எப்பொழுதும் அமைதி நிலவட்டும்; உன்னுள்ளே இருக்கும் அரண்மனைகள் நலத்துடன் விளங்கட்டும்.

என் சகோதரர்களின் பொருட்டும், என் நண்பர்களின் பொருட்டும் உன்பால் அமைதி நிலவுக என்று நான் உன்னை வாழ்த்துகிறேன்.

எங்கள் இறைவனுடைய திருக்கோயில் உன்பால் இருப்பதால், உனது நலத்தில் நான் கருத்துடன் இருப்பேன்.

சங்கீதாகமம்; 122

இத்தகைய பாடல்களைப் பாடிக்கொண்டு, திரள் திரளாக, மக்கள் ஜெருசலத்தை நோக்கிப் போவார்கள்.

இப்படி மூன்று நாட்கள் பிரயாணம் செய்து, இயேசுநாதரும் அவருடைய பெற்றோரும் ஜெருசல நகரை அடைந்தார்கள்.

இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தை சோசப் அங்கு செய்ய வேண்டிய சடங்குகளை முறைப்படி செய்து முடித்தார்.

இந்த விழாவுக்காக மக்கள் திரள்திரளாக வந்திருப்பதை

யும் ஆட்டுக்குட்டியைப்பலியிட்டு, பாஸ்கு விழாவை அவர்கள் பயபக்தியுடன் கொண்டாடுவதையும், யூத குருமார்களின் நடையுடை பாவனைகளையும், இயேசுநாதர் ஊன்றிக் கவனித்தார்.

பண்டிகையை முடித்துக்கொண்டு யாத்திரீகர்கள் தத்தம் ஊர் திரும்பத் தொடங்கினர். ஜெருசலத்திற்கு யாத்திரை வரும்போதும் சரி, ஜெருசலத்திலிருந்து திரும்பும் போதும் சரி, ஆடவர் ஒரு தொகுதியாகவும் பெண்கள் ஒரு தொகுதியாகவும் சேர்ந்து பிரயாணம் செய்வது வழக்கம். குழந்தைகள் மட்டும் ஆடவர் தொகுதியிலும் சேர்ந்து பிர யாணம் செய்யலாம்; பெண்கள் தொகுதியிலும் சேர்ந்து பிரயாணம் செய்யலாம்.

அந்த வழக்கப்படி, இயேசுநாதரின் பெற்றோர், ஜெரு சலத்திலிருந்து ஒரு நாள் காலை கிளம்பினார்கள். ஒரு நாள் முழுதும் பிரயாணம் செய்து, இருட்டியதும் ஒரு இடத்தில் தாமதித்தார்கள். உணவு உண்பதற்காக, மேரியும் சோசப்பும் சந்தித்தபோது, இயேசுநாதரை அங்கு காணோம். மேரியுடன் இயேசுநாதர் வருவதாக, சோசப் எண்ணிக் கொண்டு வந்தார். சோசப்புடன் வருவதாக, மேரி எண்ணிக் கொண்டு வந்தாள். இருவரும் சந்தித்தபோதுதான், தங்கள் குழந்தை இயேசு தங்களுடன் வரவில்லை என்பதும், ஜெரு சலத்திலேயே அவர் தங்கிவிட்டார் என்பதும் தெரியவந்தன.

இருவரும் பதறிப் போனார்கள். ஆகையால் குழந்தை இயேசுநாதரைத் தேடிக் கண்டுபிடிக்கும் பொருட்டு, ஜெரு சலத்துக்குப் போனார்கள். ஜெருசலத்தை அடைந்து, தேடிப் பார்த்தார்கள். மூன்று தினங்களுக்குப் பின்னர், தங்கள் குழந்தை இயேசுநாதரைக் கோயிலில் கண்டார்கள்.

படித்த குருமார்களுக்கு மத்தியில் இருந்து, அங்கு இயேசு நாதர் உரையாடிக்கொண்டு இருப்பதையும், அவர் கூறு வதை எல்லாம் குருமார்கள் உற்றுச் செவிமடுத்துக்கொண் டிருப்பதையும் கவனித்தார்கள். இயேசுநாதர் குருமார்களைக் கேள்விகள் கேட்பதையும் அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு இயேசுநாதர் விடை பகர்வதையும், அவற்றைச் செவிமடுத்த

குருமார்கள் வியப்பில் மூழ்குவதையும் பார்த்து, சோசப்பும் மேரியும் வியப்பில் மூழ்கினார்கள்.

அந்தக் காலத்தில் குருமார்களுக்குச்செல்வாக்கு அதிகம். அதனால் அவர்களை அணுகுவதற்கும் கேள்விகள் கேட்பதற்கும் யாருமே அஞ்சுவார்கள். அத்தகைய குருமார் கூட்டத்தின் மத்தியிலே தன் புதல்வன் இயேசு இருப்பதைக் கண்டதும், அன்னை மேரி வியப்பில் ஆழ்ந்தாள். ஆகவே, மைந்தனை அணுகி, ''மகனே! நீ ஏன் இப்படிச் செய்தாய்? உன்னைக் காணாமல் தேடித் தேடி நானும் உன் தந்தையும் அலைந்து திரிந்தோமே!'' என்று சொன்னாள்.

இவ்வாறு மேரி சொன்னதும் இயேசுநாதர் அவளை நோக்கி, ''எதற்காக என்னை நீங்கள் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவலகம் வந்திருக்கிறேன் என்பது உங்களுக்கு தெரியாதா?'' என்று கூறினார்.

பொது இடத்தில் இயேசுநாதர் சொன்ன முதற் சொற்கள் இவை. இவற்றின் உட்பொருளை, மேரியாலும் சோசப்பாலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஆகவே, மேலும் எதுவும் பேசாது, இயேசுநாதரை அழைத்துக்கொண்டு, நாசரத்துக்கு அவர்கள் திரும்பினார்கள்.

சூழ்நிலை

தமது பன்னிரண்டாம் வயதில் ஜெருசலம் சென்று திரும்பிய இயேசுநாதர், பதினெட்டு ஆண்டுகளை நாசரத்தில் கழித்தார்.

> வயது ஆக ஆக, அவர், அறிவிலும் அன்பிலும் தெய்வ பக்தியிலும் அபிவிருத்தி அடைந்து வந்தார்.
>
> லுக்கா: 2.51

பிற்காலத்தில் தாம் செய்யவிருக்கும் மகத்தான சேவைக்கும் தியாகத்துக்கும் தம்மை இயேசுநாதர் எப்படி எப்படி தகுதிப்படுத்திக்கொண்டார் என்பதை இந்தப் பைபிள் வாக்கியம் சுருக்கமாகவும் கச்சிதமாகவும் கூறுகிறது:

மனிதன் மகத்தான சேவை புரிவதற்கு முதலில் அறிவு வேண்டும். அதில் இயேசுநாதர் அபிவிருத்தி அடைந்திருக்கிறார். அறிவு மட்டும் இருந்தால் போதாது. பிற மக்களிடத்து அன்போடு உறவாடத் தெரிந்திருக்க வேண்டும். தெய்வம் அருள் சுரந்தால்தான் இவைஇரண்டும் கிடைக்கும். ஆகவே, தெய்வபக்தி அவசிய மாகும். அறிவு, அன்பு, தெய்வ பக்தி இந்த மூன்றும் இருந்தால்தான் ஒரு மனிதனால் சேவை செய்ய முடியும் என்பதை நாம் அறிகிறோம்.

இந்த மூன்று நிலைகளிலும் இயேசுநாதர் அபிவிருத்தி அடைந்து வந்த சமயம்,—அதாவது அவருக்கு முப்பதாவது வயது நடைபெறும் சமயம்—கலிலேயா நாட்டின் சூழ்நிலை, பொருளாதார நிலை, அரசியல் நிலை, சமய நிலை, பண்பாட்டு நிலை முதலியன எப்படி எப்படி இருந்தன என்பதை இங்கு நாம் சிறிது நினைவுபடுத்திக்கொள்வது அவசியம்.

நாட்டு நிலை: இயேசுநாதர் பிறந்த பாலஸ்தீன நாடு அளவில் மிகவும் சிறிய நாடு, அதன் நிலப்பரப்பு சுமார் 9700 சதுர மைல்கள்தான். ஜனத்தொகையும் அவ்வளவு அதிகம் இல்லை. நாடு சிறியதாய் இருந்தபோதிலும், அந்தக் காலத்தில் அந்த நாடு மிகுந்த செழிப்புடன் விளங்கிற்று. அதிலும் குறிப்பாக, இயேசுநாதர் பிறந்து வளர்ந்த கலிலேயாப் பகுதி, பசுமையான மலைகளும் செழிப்பான பள்ளத்தாக்குகளும் சிற்றாறுகளும் நீரூற்றுகளும் பெற்றுச் சிறப்புடன்விளங்கிற்று. இங்கே கோதுமை வயல்களுக்கும் பழத் தோட்டங்களுக்கும் குறைவில்லை. பத்து மாதங்களுக்குக் குறையாமல், கலிலேயாப் பகுதிகளில் பழ வகைகள் கிடைக்கும். மீன்களும் தானியங்களும் தாராளமாகக் கிடைக்கும்.

அதனால் இந்தப் பகுதியில் பல்வேறு நாட்டைச் சேர்ந்த மக்கள், திரளாக வந்து குடியேறி வசித்தார்கள். கலிலேயாப் பகுதியில் மொத்தம், சிறிதும் பெரிதுமாக இரு நூற்று நான்கு ஊர்கள் அந்தக் காலத்தில் இருந்ததாகக் கணக்கிட்டு இருக்கிறார்கள்.

இயேசுநாதர் வளர்ந்த நாசரத் என்பது சிறிய கிராமம்; செழிப்பான கிராமம்; பலவேறு நாட்டு மக்கள்

வந்து குடியேறி வசித்த பகுதியாகையால், இந்தப் பகுதியில் வாழும் மக்கள் பேசும் மொழி, கொச்சை மொழியாகவும் கலப்படை மொழியாகவும் இருந்தது.

பொருளாதார நிலை: நாடு செழிப்பாய் இருந்தபோதிலும், பாலஸ்தீன மக்களில் பெரும்பாலோர் ஏழைகளாய் இருந்தார்கள். அன்றாடம் பாடுபட்டு உழைத்து, நாளையும் பொழுதையும் அந்த ஏழை மக்கள் கழித்து வந்தார்கள். இப்படி அன்றாடம் உழைத்து, வயிறு வளர்க்கும் ஓர் ஏழைத் தொழிலாளியின் வீட்டில்தான், இயேசுநாதர் பிறந்து வளர்ந்தார். ஏழைகளுக்கு இருக்கும் இன்னல் இடுக்கண்களையும், இன்ப துன்பங்களையும், ஏழைக் குடியில் பிறந்தால் தான் அறிய முடியும் என்பதற்காகத்தான், இறைவனின் திருக் குமாரரான இயேசுநாதர் ஏழைத் தச்சர் ஒருவர் வீட்டில் பிறந்தார் போலும். அந்தக் காலத்தில் வாழ்ந்த பணக்காரர்கள், ஏழை எளியவர்களுக்குச் சிறிதும் உதவவில்லை என்று தெரிகிறது. அதனால்தான்,

> ஊசியின் காதில் ஒட்டகம் எளிதில் நுழைந்துவிடும்: ஆனால்,
> பணக்காரன் சொர்க்கத்தில் எளிதில் பிரவேசிக்க முடியாது
>
> மத்தேயு 19.24

என்று எடுத்துக்காட்டி இயேசுநாதர் போதனை செய்து இருக்கிறார். ஆகையால், இயேசுநாதர் காலத்திலும், ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கும் இடையில் நிலவிய உறவு, அவ்வளவு சுமுகமாக இல்லை என்று எண்ண, இந்தப் பைபிள் வாசகம் இடம் தருகிறது.

அரசியல் நிலை: அபிரகாம் வழி வழியாக வந்தவர்களை, ஹிப்ருக்கள் என்றும் இஸ்ராயேலர்கள் என்றும் அழைப்பார்கள். யூதர்கள் என்பதும் உண்டு. அபிராகாமுக்கு ஜாகோப் என்று ஒரு பேரன் இருந்தார். அவர் பெயரை இறைவன் இஸ்ராயேல் என்று மாற்றினார். அன்று முதல் அவர் வழி வழி வந்தவர்களுக்கு, இஸ்ராயேலர்கள் என்னும் பெயர் ஏற்பட்டது.

பாலஸ்தீன நாட்டை இஸ்ராயேலர்கள் ஆண்டு வந்தார்கள். இடையிடையே அந்நியர்களுக்கு அடிமைப்பட்டு